கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்

எஸ். எம்.
பெர்னாண்டோ

580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

S. M. FERNANDO
OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 22 ஞாயிற்றுக்கிழமை (07 – 11 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 344

# படையினர் தனித்தனி சோதனை கெடுபிடி!

# கப்பற் பொருள்கள் வருவதில் தாமதம்!!

## ஏற்றப்படும் அளவு குறைகிறது

யாழ்ப்பாணம், நவம்பர் 7

யாழ்ப்பாணத்துக்கு கப்பலில் கொண்டுவரப்படும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை இப்போது முப்படையினரும் தனித் தனியாகச் சோதனையிடுகின்றனர். ஒவ்வொரு பொதியாக உடைத்துப் பார்க்கின்றனர்.

படையினரின் இந்த சோதனையால் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் நீண்ட நாட்கள் தரித்து நிற்கும் நிலை ஏற்படுகிறது அதனால் கப்பல்களில் பொருள்களை இங்கு ஏற்றி வருவதில் பெரும் காலதமதம் ஏற்படுகிறது.

இதேவேளை சோதனைக் கெடுபிடிகளால் இப்போது கப்பல்களின் வழமையான கொள்ளளவில் அரைவாசிப் பொருள்களே எடுத்து வரப்படுகின்றன. அதாவது இது வரை கொண்டுவரப்பட்ட பொருள்களில் அரைப் பங்கே இங்கு வந்து சேர்கிறது.

முன்னர் கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தின் அனுமதி பெற்றுக் கொண்டு வரப்படும் பொருள்களைக் கொழும்புத் துறைமுகத்தில் கடற்படையினர் மட்டுமே சோதனையிட்டு வந்தனர்.

ஆனால் இப்போது பாதுகாப்பு இணைப்புக் குழுவின் அனுமதி பெற்றுத் துறைமுகத்துக்குக் கொண்டு வரப்படும் பொருள்களை கடற்படை, இராணுவம், பொலீஸ் ஆகிய மூன்று படைகளையும் சேர்ந்த அதிகாரிகள் துருவித் துருவித் சோதனையிடுகின்றனர். ஒரு பொதி மூன்று தடவைகள் சோதிக்கப்படுகிறது.

இதனால் கொழும்புத் துறைமுகத்துக்கு எடுத்து

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு அறிக்கை நாளை மறுதினம்

கொழும்பு, நவ. 7

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவின் அறிக்கை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கிறது.

சகல தமிழ்க் கட்சிகளும் வெளியேறிய நிலையில் தனியே சிங்களக் கட்சிகள் மட்டும் கலந்து கொண்ட நிலையில் தயாரிக்கப்பட்டுள்ள இறுதி அறிக்கை, இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையுமா என்பது சந்தேகமே என்று பி.பி.ஸி சிங்களச் சேவையில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

'திவயின' பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் தயாலங்காபுர நேற்று பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில்; தெரிவுக் குழுவின் அறிக்கையில், வடக்கும் கிழக்கும் இரு நிர்வாக அலகுகளாக அமைக்கப்பட்டு அவை இரண்டையும் இணைக்கும் மற்றொரு நிர்வாக அமைப்பு உயர்மட்டத்தில் அமைக்கப்படுவது பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றும்—

இதுவே அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய சிபார்சு என்றும் — தெரிவித்துள்ளார்.

வடக்கும் கிழக்கும் இணைக்கப்படுவது குறித்து கிழக்கு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வாதுவ, றுகுணு கப்பல்கள் இன்று புறப்படுகின்றன

### குமண நேற்று வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், நவ. 7

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்துக் கொண்டு 'வாதுவ' 'றுகுணு' ஆகிய இரு கப்பல்களும் இன்று பிற்பகல் புறப்படவுள்ளன.

'வாதுவ' கப்பல் இன்று பிற்பகல் சுமார் 45பயணிகளுடன் திருமலை நோக்கிப் புறப்படவுள்ளது.

3 ஆயிரம் பரல் மண்ணெண்ணையை இறக்கிவிட்டு றுகுணு கப்பல் இன்று கொழும்பு புறப்படவுள்ளது. அந்தக் கப்பலில் பயணிகள் மூவர் செல்கின்றனர்.

அதேசமயம் 1,900 மெற்றிக் தொன் பொருகள்ளுடன் 'குமண' கப்பல் நேற்று இங்கு வந்து சேர்ந்தது.

நேற்று நண்பகல் பருத்தித் துறைக்கு வந்து சேர்ந்த அந்தக் கப்பல் பயணிகள் மூவரை இறக்கி விட்டு காங்கேசன்துறைக்குச் சென்றது.

'வாதுவ', 'றுகுணு' ஆகிய இரு கப்பல்களும் பருத்தித் துறையில் பொருள்களை இறக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்ததால், 'குமண' கப்பல் நாளை திங்கட்கிழமையே பருத்தித்துறைக்கு வந்து பொருள்களை இறக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

குமண கப்பலில் ஆயிரம் மெற்றித் தொன் மா எடுத்து வரப்பட்டுள்ளது. அத்துடன் யாழ். ஆஸ்பத்திரிக்கு ஒரு தொகுதி மருந்து வகைகளும்—தனியார் வர்த்தகர்களுக்கான பொருள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பேர்னாட் சொய்ஸாவுக்கு கொலைப் பயமுறுத்தல்

லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. பேர்னாட் சொய்ஸாவுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக கட்சியின் பொதுச் செயலர் திரு. பற்றி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட யாழ்தேவி நடவடிக்கையின் தோல்வி பற்றி கட்டுரை எழுதிய பத்திரிகையாளர் இக்பால் அத்தாசுக்கு இராணுவத் தளபதியால் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டது. இதனைக் கட்சியின் பத்திரிகையில் ஆசிரிய தலையங்கம் எழுதியமைதை அடுத்து ஆத்திரமடைந்த கும்பல் ஒன்று நவசமசமாஜக் கட்சியையும், அதன் உறுப்பினர் பேர்னாட் சொய்ஸாவையும் இம்மாத இறுதிக்குள் அழித்தொழிக்கப் போவதாகப் பயமுறுத்தல் விடுத்திருப்பதாகவும் திரு. பற்றி வீரக்கோன் தகவல் வெளியிட்டுள்ளார். (இ-5-6)

## அமைதியான வாக்களிப்பு

புதுடில்லி, நவ. 7

புதுடில்லி சட்டப் பேரவைத் தொகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தலில் சுமார் 60 சதவீத வாக்குகள் பதிவாகின.

சிறு சிறு அசம்பாவித சம்பவங்களைத் தவிர பெரும்பாலும் வாக்குப் பதிவு அமைதியாக நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

### பரீட்சார்த்திகள் ஆட்சேபம்

## கூட்டுறவு பரிசோதகர் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 7

கூட்டுறவுப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக நடைபெற இருந்த போட்டிப் பரீட்சை வினாத்தாள் வந்து சேர்வதில் ஏற்பட்ட தாமதத்தினாலும்—

பரீட்சைக்கு விண்ணப்பித்து அனுமதி அட்டைகள் இது வரை கிடைக்கப் பெறாதவர்களது ஆட்சேப நடவடிக்கைகளாலும் — நேற்று நடைபெறவில்லை.

நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற இருந்த இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் குமண கப்பலில் எடுத்து வரப்பட்டு நேற்றுப் பிற்பகலிலேயே பரீட்சை நிலையத்துக்கு வந்து சேர்ந்தன.

நேற்றுப் பிற்பகலில் அந்தப் பரீட்சையை நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்த போதும்—

பரீட்சைக்கு விண்ணப்பித்து இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் பெரும் எண்ணிக்கையில் கூடி நின்று தமது ஆட்சேபனையைத் தெரிவித்தனர். இதனை அடுத்தே பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் சுமார் 300 பேருக்கு இதுவரை

(5ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண கல்விநிலை: பல்கலைக்கழகம் ஆய்வு

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்விநிலை பற்றிய ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளும் முயற்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஈடுபட்டுள்ளது.

மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான ஆய்வின் முதற்கட்டமாக பாடசாலைகளில் இருந்து விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஜி. சீ. ஈ. சாதாரணதரம், உயர்தரம் ஆகிய வகுப்புகளில் மாணவரின் கல்விப் பெறுபேறு பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

தகவல்களைச் சேகரித்துத் தொகுத்து மதிப்பீடு செய்வதற்கு வசதியாக கேள்விக்கொத்து ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தக் கேள்விக்கொத்தை நேரில் கொண்டு சென்று பாடசாலை அதிபர்களிடம் இருந்து 1988 முதல் 1992 வரையான 5 வருடங்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டும் பணியில் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சாதாரணதர, உயர்தர வகுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர் பற்றாக்குறை, இடம்பெயர்ந்த மாணவர்களைச் சேர்த்துக்கொண்டமை, பரீட்சைகளில் மாணவர்களின் பெறுபேறுகள், கட்டட வசதியின்மை, பாடத்திட்டம் கற்பித்து முடிக்கப்படாமைக்கான காரணம் போன்ற விவரங்கள் கேள்விக்கொத்தில் கோரப்பட்டுள்ளன. (அ)

## வீரப்பனின் மனைவி கைது

சென்னை, நவ. 7

தீவிரமாகத் தேடப்பட்டு வரும் பிரபல சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பனின் மனைவியான முத்துலட்சுமியை (வயது 26) பொலீஸார் நேற்றுக் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தமிழக — கர்நாடக எல்லை யோரம் காட்டுப்பகுதியில் உள்ள மறைவிடம் ஒன்றில் வைத்துப் பொலிஸார் அவரைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்தின் ஊட்டி நகரைச் சுற்றியுள்ள காட்டுப் பகுதியில் வீரப்பன் மறைந்திருப்பதாக பொலிசார் நடத்திய விசாரணையின் போது அவர் கூறியுள்ளார்.

## உலகிலே சலுகை – சுதந்திரம் உள்ள அமைச்சர் தொண்டமான்

### ஐலண்ட் பத்திரிகை விமர்சனம்

கொழும்பு, நவ. 7

''அநேகமாய் உலகிலேயே மிகவும் சலுகையும், சுதந்திரமும் பெற்ற அரசியல்வாதியாக தொண்டமான் இருக்கிறார்.''

''த ஐலன்ட்'' பத்திரிகையில் வெளியான விமர்சனம் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமர்சனம் மேலும் கூறுவதாவது:

'இலங்கை அமைச்சரவையில் அங்கம் வகித்துக் கொண்டு உலகில் முக்கிய தலைநகரங்களில் நின்று அந்த அரசாங்கத்தையே கண்டித்து பேசும் தனித்தன்மை வாய்ந்தவராக தொண்டமான் இருக்கிறார்.

சிங்களத் தலைவர்கள் எவரும் நம்பமுடியாதவர்கள் என்றும் —

தமிழர்களுக்குள்ள உரிமைகளை பறிக்கவேண்டும் என்று சிங்களவர்கள் உறுதி பூண்டுள்ளார்கள் என்றும் —

தமிழர்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமானால் சிங்களவருக்கு எதிராகத் தமிழர்கள் ஒன்று திரள வேண்டும் என்றும் — சண்டே ரைம்ஸுக்கு அளித்த பேட்டியில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஒரு பகுதி மக்களுக்கு எதிராக இன்னொரு பகுதி மக்களை தூண்டிக்கொண்டும்,

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரைக் கண்டு ஓடும் ராணுவமும் பொலீஸும்!

யாழ்ப்பாணம், நவ. 7

இன்று தமிழரைக் கண்டு பொலீஸாரும் இராணுவத்தினரும் ஓடுகின்றனர். இது குறித்து நாம் பெருமைப்பட வேண்டும்.

கைத் தொழில் ராஜாங்க அமைச்சர் திரு. செல்லச்சாமி இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கூட்டம் ஒன்று அண்மையில் ஹாலியெலவில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே திரு. செல்லச்சாமி இவ்வாறு கூறினார்.

கடந்த காலங்களில் இராணுவத்தினரையோ பொலீஸாரையோ கண்டவுடன் தமிழர்கள் ஓட்டமெடுத்தனர். ஆனால் இன்று அந்த இராணுவத்தினரும், பொலீஸாரும் ஒரு தமிழரைக் கண்டவுடன் அவர்கள் புலி எனப் பீதியடைகின்றனர். இது அவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது. இது மிகப் பெரிய ஒரு திருப்பமான சாதனை நடவடிக்கையாகும். இதனையிட்டு நாம் பெருமைப்படவேண்டும்.

தமிழர்களின் உறுதியான ஆற்றல் அவர்களின் ஒற்றுமையில் தான் தங்கியுள்ளது. அந்த வலிமை எம்மிடம் இருக்கும் வரையும் எந்தப் பலாத்காரத்திற்கோ அரசாங்கத்திற்கோ நாம் அஞ்சவேண்டியதில்லை.

இவ்வாறு திரு செல்லச்சாமி மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஹஸ்ரத்பால் மசூதி பகுதியில் ஆயுதங்கள்

### படையினர் கைப்பற்றினர்

புதுடில்லி, நவ. 7

இந்திய இராணுவத்தின் முற்றுகையில் இருக்கும் ஹஸ்ரத்பால் மசூதிக்கும், அங்குள்ள பல்கலைக்கழகத்துக்கும் இடையே குப்பைக் கிடங்கு ஒன்றில் இருந்து ஆயுதங்களையும், வெடி பொருள்களையும் இந்திய இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை—

ஹஸ்ரத்பால் மசூதி முற்றுகை விவகாரம் விரைவில் முடிவுக்கு வரலாம் என செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன. கடந்த 24 மணி நேரத்தில் தீவிரவாதிகளுடன் நான்கு முறை சமரசப் பேச்சுக்கள் நடந்ததாக அறிவிக்கப்பட்டது. [இ-5]

# ஜனநாயக உரிமைகளில் தலையிட ராணுவ உயர் தலைவர்கள் முயற்சி

### லங்கா சமசமாஜக்கட்சி செயலாளர் தெரிவிப்பு

லண்டன், நவ. 7

இலங்கையின் ஜனநாயக உரிமைகளில் தலையிடுவதற்கு இராணுவ உயர் தலைவர்கள் முயன்று வருகின்றனர். பத்திரிகையாளர் ஒருவருக்கும், அரசியல்வாதி ஒருவருக்கும் எதிராக அண்மையில் இராணுவத் தளபதி ஒருவரால் விடுக்கப்பட்ட கொலைப் பயமுறுத்தல் இந்தப் போக்கையே புலப்படுத்துகிறது.

லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. பற்றி வீரக்கோன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் இக்பால் அத்தாசுக்கும், லங்கா சமசமாஜக் கட்சி உறுப்பினர் திரு. பேர்னாட் சொய்ஸாவுக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதை அடுத்து எழுந்துள்ள நிலைமை பற்றி பி.பி.ஸிக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேல்கண்டவாறு கூறினார்.

சுதந்திரமான கருத்துக்களை வெளியிடும் உரிமையை பறித்தெடுக்க இராணுவத் தலைமைப்பீடம் முயல்வதையே இத்தகைய நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

—வடக்கு கிழக்கு யுத்தத்தினால் பயன்பெறும் சில உயர் இராணுவத் தலைவர்கள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்படுவதை விரும்பவில்லை — இப்படி அவர் மேலும் கூறினார். (இ-5)

### மூச்சந்தி முனி



யாழ்ப்பாணம் போற சாமானை இப்படியும் ஒரு வழியாலை வெட்டுவோம் எண்டு யோசிச்சிட்டினம் போலை... உளவியல் போரின் மற்றொரு வடிவம் பாருங்கோ......!

காற்றுக்கு கைவிலங்கு போடுவதில்லை
நிலவை சிறையில் போடுவதில்லை
ஈழத்தமிழனே!
உனக்கு மட்டும் ஏன் அடிமை வாழ்வு
நினைத்துப் பார்த்து நெஞ்சை நிமிர்த்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

திறமான நஷனல் என். வி. 370 டெக், டி. வி. ஆங்கில தட்டெழுத்து யந்திரம், வீட்டு தளபாடங்கள், தண்ணீர் இறைக்கும் யந்திரம், பதினாறு ஸ்போட்ஸ் கப்ஸ் முதலியன. ஷண் இல. 387A, கோவில் வீதி, நல்லூர். (சங்கிலியன் வீதி, அருகில்) (27934)

5 K. V. மின்வலுவுள்ள ஜெனரேற்றர் ஒன்றும் டீசல், **Panasonic V. D. O. Mixer** ஒன்றும். (WJ-MX-10) விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் காலை 9 தொடக்கம் 12 மணிவரை. ரெவிகோணர், நவீன சந்தை, (மேல்மாடி) சாவகச்சேரி. (6583)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஒழுங்கை திருநெல்வேலி வடக்கில் சந்தைக்கு மிக அருகாமையில் சகல வசதியும் கொண்ட இரண்டு பரப்பு காணியும், வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி வனிதாதேவி விவேகானந்தம், செம்பாட்டுலேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (27931)

அடை வைப்பதற்குகந்த பாமாஸ், சிலம்பு பன்டம், பிறேசில், வைற் சிலிக்கி, கலர் சில்கி, ஹங்கேரியன் பிராமா, போலிஸ், பாபடி இறேஸ், வெள்ளடியன் முட்டைகள் உடன் விற்பனைக்குண்டு. ஐந்து சந்தி, 684, நாவாந்துறை வீதி, யாழ்ப்பாணம், (27929)

### வாங்குகின்றோம்

வேப்பம் விதை, இலுப்பம் விதை வாங்குகின்றோம். மில்க்வைற் (சி-6323)

### தேவை

பல்கலைக்கழக மாணவருக்கு திருநெல்வேலி சுற்றாடலில் அமைதியான சூழ்நிலையில் அறை வாடகைக்குத் தேவை. கடித மூலம் தொடர்பு: இல: 569, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (27927)

சியாக்காய் பவுடர், பற்பொடி, நிலம் ஒட்டுவதற்கு பெண் பிள்ளைகளும், சைக்கிளில் வியாபாரம் செய்யக் கூடிய ஆண்களும் தேவை. தொடர்பு: ஜெயலட்சுமி இன்டஸ்ரீஸ், பாடசாலை வீதி, ஆறுகால்மடம். (27933)

### மணமகள் தேவை

தற்பொழுது ஆஸ்திரேலியாவில் பல்கலைக்கழகத்தில் **Post - Graduate Accountancy** பயிலும் யாழ். பல்கலைக்கழக **B.Sc. (Second Class)** பட்டதாரி மகனுக்கு பெற்றோர் மணமகள் தேடுகின்றனர். நட்சத்திரம் திருவோணம், வயது 30, **Fair**, உயரம் 5' 7" பட்டதாரிகள் விரும்பத்தக்கது. சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். இல. 568, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (27863)

### மணமகன் தேவை

இந்து, 36 வயது (செவ்வாய்க் குற்றமற்ற கேட்டை) அழகிய மணப்பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (27912)

### ஓடுகள் தேவை

ஓடுகள் தேவை. விநியோகிக்க விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ஆறுமுகம் ராஜ்குமார், செயலாளர், மனோன்மணி சனசமூக நிலையம், நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில். (27897)

### பசுமாடு

பசுமாடு இல. 20 எமது பண்ணையில் உள்ள பசுமாடு கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. வாங்குவோர் 12-11-93ஆம் திகதிக்கு முன் கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி. (சி-6329)

### எவர்விஷன்

எம்மிடம் திருத்துவதற்கு ஒப்படைத்து அதிக காலமாக எடுக்காத T.V., டெக் என்பவற்றை உடன் திரும்பப் பெற்றுக் கொள்ளவும். (சி-6525)

### ஆட்கள் தேவை

சுவீற்ஸ், உள்நாட்டு, வெளிநாட்டு உணவு வகைகள் சமைக்கத் தெரிந்தவர்கள் நேரில் வரவும். றிக்கோ சுவீற் அன் கிறீம் கவுஸ், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (6584)

### மீண்டும் சனி மாற்றம்

10-11-93 கும்பராசிக்கு சனி மீண்டும் மாற்றம் அடைகின்றது. வியாழ மாற்ற பலன்களும், சாயிபாபா போன்று மற்றுமோர் அவதார புருஷர் தமிழ்நாடு சிவகங்கைச் சித்தரின் அற்புதங்களும், சத்யாவின் எண் ஜோதிடமும் அடங்கியவை. ரூபா 10/- எங்கும் கிடைக்கும். குலசி ரேடர்ஸ், கல்வியங்காடுச் சந்தி. (6716)

### O/L MATHS

**G. C. E. O/L** லில் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் **Distinction** பெறுபேறடையக் கற்பிக்கப்படும் திரு. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (6567)

### ஆவே மரியா

செபமாலைகள், செபமாலை தியான புத்தகங்கள், ஆரோக்கிய மாதா நவநாள், அந்தோனியார் நவநாள், குழந்தை இயேசு நவநாள் விற்பனைக்குண்டு. புனித சித்தாந்திரை மாதா இல்லம், 92, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (27932)

### A/L பௌதீகவியல் 94/95

பௌதீகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம், சிறப்பாக பல வருடம் அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளோடு கற்பிக்கப்படும். R. பாலசுப்பிரமணியம், B. Sc. (Cey) Dip - in - Ed, 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (6585)

### இந்தியா ருடே

இந்தியா ருடே ஆண்டுமலர் 93-94 சொற்ப பிரதிகள் கைவசம், தீபாவளி வாழ்த்து மடல்கள் மொத்த விற்பனையாளர் மக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். ஸ்ரீகாந் புத்தகசாலை, 165, பவர் கவுஸ் றோட், யாழ்ப்பாணம். (சி-6523)

### ஆங்கிலக் கட்டுரைகள்

**105, Model Compositions in English.** 105 தரமான ஆங்கிலக் கட்டுரைகள், G. C. E., N. C. E. மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்குரிய நூல். ஆக்கியோன்: த. ந. பஞ்சாட்சரம், விலை ரூபா 125/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (27924)

### தவறிவிட்டது

1¾ பவுண் வெள்ளை முத்துச் சங்கிலி 3-11-93 அன்று விவேகானந்தா அச்சகத்திற்கும் பிரதான தபால் நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து R. மோகன், மின்சார நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (27921)

## கணனி கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 7

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கணனி கல்வி நிலையங்களின் அனுசரணையுடன் நடத்தும் கணனிக் கண்காட்சி எதிர்வரும் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

தினமும் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை கண்காட்சி நடைபெறும்.

இந்த கண்காட்சியைப் பார்வையிட விரும்புவோருக்கு விசேட பஸ் சேவைகளை யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையம் ஏற்பாடு செய்துள்ளது. (இ-த)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

# வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்-1994

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்குத் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1993 டிசம்பர் 15ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**வழங்கல்கள்:**

01. எழுதுபொருட்கள்
02. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
03. அலுவலக தளபாடம் - மரம்
04. அலுவலக சாதனங்கள் (ஸ்டீல் அலுமாரி, கபினேட்டுகள் முதலியன)
05. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதிபண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன)
06. சகலவகை ஹார்ட்வெயார் பெயிண்டுகள், வார்னிஷ்
07. இயந்திர கருவிகளும், உதிரிப்பாகங்களும்
08. மின்சார சாதனமும், உதிரிப்பாகங்களும்
09. வெட்டும் கருவிகள், மண்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், யன்னல் திரைச்சீலைகள், சீருடைத் துணிகள் முதலியன.
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப் பொருள்களும், கண்ணாடிப் பொருள்களும்
12. மரம்
13. கட்டடப் பொருள்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
14. தும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள் முதலியன
15. டயர்கள், டியூப்புகள், பற்றறிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகளும்
17. ஆயுர்வேத மருந்துகள்
18. மருந்துகளும் மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருள்கள்
20. தீயணைப்பு சாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன
22. பைப்புகளும், பைப் இணைப்புக்களும்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மண்பாண்டப் பொருள்கள், கண்ணாடிப் பொருள்கள், கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள் உறுப்புக்கள்

**சேவைகள்:**

01. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
02. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்
03. குளிர்சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர்கள், திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்
04. ஸ்டீல் தளபாடங்களின் திருத்த வேலைகள்
05. மரத் தளபாடங்களுக்கான திருத்த வேலைகள்
06. கதிரைகள் பின்னல்
07. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகளைத் தைத்தல்
08. பெயர்ப் பலகைகள் வரைதலும், பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகளைச் செய்தலும்
09. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும், பருவ வெளியீடுகளையும் 'பைண்டிங்' செய்தல்

**எந்திரவியல் சேவைகள்:**

01. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
02. மின்மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
03. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்)
04. மின்சார வயறிங் வேலைகள்
05. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள்/ திருத்த வேலைகள்
06. இரும்பு கிறில்கள்/கேற்றுகள் உருவமைத்தல்/ பொருத்துதல்
07. கட்டடங்கள்/கட்டட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
08. நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல்/பொருத்துதல்

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்கல்கள்/சேவைகள் - 1994'' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

01. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.
02. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல்/சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக் கட்டணமாக ரூபா 150/- பெறுமதியான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக் கட்டளை/தபாற் கட்டளையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்தும் விலை மனுக்களை கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும் பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருள்களை சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
02. பெயரும் விலாசமும்
03. தொலைபேசி இலக்கம்
04. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
05. வியாபாரத்தின் தன்மை
06. வங்கியாளர்களின் பெயர்
07. கிடைக்கக் கூடிய கடன் வசதிகள்
08. ICTAD பதிவு இலக்கம் / புத்தக இலக்கம் (3இற்கு மட்டும்)

**குறிப்பு:**

பொறியியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடம் இருந்து பின்வரும் மேலதிக தகவல்கள் கோரப்படுகின்றன.

எந்திரவியல் சேவை 3க்கு பின்வருவோர் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவார்.

(அ) ICTAD தரப்படுதலின் கீழ் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்களம் / கூட்டுத்தாபனம்/சபைகளில் பதிவுசெய்துள்ளவர்கள் (பதிவுப் புத்தகத்தின் போட்டோப் பிரதி / அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

(ஆ) விண்ணப்பதாரர் கிளிநொச்சி/ வவுனியா மாவட்டங்களில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும். அத்துடன் அம்மாவட்டங்களில் உள்ள தமது கிளை / பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்திற்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

(இ) உங்கள் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக் கலைஞர் ஆகியோரின் பெயர், அனுபவங்களைத் (7இற்கு மட்டும்) தருக.

**-பதிவாளர்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி-6437)

---

## வர்த்தகர்கள் - பொதுமக்கள் கவனத்திற்கு

எமது நிறுவனத்தில் கடமையாற்றிய

**தயாபரராசா துரைராசசிங்கம், தயாபரராசா அருள்ராசசிங்கம்**

ஆகியோர் தற்போது எமது நிறுவன சேவையில் இல்லையென்பதையும் எமது நிறுவனம் சார்பாகவோ அல்லது தனிப்பட்ட ரீதியிலோ அவர்களுடன் மேற்கொள்ளும் எந்தவிதமான கொடுக்கல் வாங்கல்களுக்கும் நாம் பொறுப்பாளியாகமாட்டோம் என்பதை இத்தால் சகல பொது மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

## திருப்பதி ஸ்டோர்ஸ்

51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். | 357, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(27938)

---

## அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

# பதவி வெற்றிடம்

இவ்வைத்தியசாலையில் அமைய ஆங்கில சுருக்கெழுத்தாளர் **(Casual English Stenographer)** பதவி ஒன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**தகைமைகள்**

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் அல்லது சி.பொ.த பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில், தமிழ்மொழி, ஆங்கிலமொழி, கணிதம் உட்பட குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. அரசாங்க தொழில் நுட்பக்கல்லூரியில் ஆங்கில சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

க.பொ.த (சா/த) சி.பொ.த பரீட்சையில் தட்டெழுத்து சுருக்கெழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

3. 22 - 11 - 93 இல் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராகவும், நாற்பது வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எனது பணிமனையில் 22-11-93 வரை ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பதாரர்கள் பின்பு என்னால் அறிவிக்கப்படும் திகதியில் எனது பணிமனையில் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். தெரிவு செய்யப்படுபவருக்கு அமைய அடிப்படையில் நியமனமும், அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ள சம்பள விகிதப்படி சம்பளமும் வழங்கப்படும்.

பணிப்பாளர்

அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (சி-6331)

---

# இன்று

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த 5 வாரங்களாக இடம்பெற்றுவந்த கிராம அபிவிருத்தி ஓர் அடிப்படைக் கற்கை நெறியின் நிறைவு நாளும் பங்குபற்றுனர் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

தொழில்பயிற்சி பெறுவதற்காக இந்து இளைஞர் யுவதிகளைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு, சமுகமளிக்கத் தவறியவர்களுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நல்லை ஆதீனத்துக்கு அருகிலுள்ள இந்து இளைஞர் பேரவையின் தர்ம சேவைத் தொடர்பகத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். (க)

★ ★ ★

இலங்கை வங்கி ஊழியர் சங்க யாழ். மாவட்டக் கிளையின் 50ஆவது வருட நிறைவுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரிய குளம் சந்தியில் உள்ள தமிழர் எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெறும். (க)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

## சித்த மருத்துவப் பிரிவிற்கு 1992/93 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவப் பிரிவிற்கு பி. எஸ். எம். எஸ். பட்டமாணிப் படிப்பிற்காக மாணவர்களைச் சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

(அ) 1989, 1990, 1992 ஏப்பிரல் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி இரசாயனவியல், பௌதீகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஆ) 1993ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதியன்று 17 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும்.

22-11-1993இல் மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகள் யாவுமுடையவராக இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்டவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதி பற்றிய விவரங்களையும், விண்ணப்பப் பத்திரங்களையும் யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். முன்பு விண்ணப்பிக்கத் தேவையில்லை.

விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய கடைசித் திகதி: 22—11—1993.

பதிவாளர்

யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்.
(சி-6313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்திர அரசியலில் ஒரு ஜெயலலிதா!

ஆந்திர மாநிலம் — ராஜமுந்திரியில் கடந்த வாரம் தெலுங்கு தேசம் கட்சியின் வருடாந்த மாநாடு நடைபெற்றது.

அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஆந்திரமாநில சட்டசபைத் தேர்தலுக்கு தமது கட்சியினரைத் தயார் செய்யும் நோக்குடன் திரு. என்.ரி. ராமராவ் இம்மாநாட்டை நடத்தினார்.

ஏராளமான மக்கள் மாநாட்டின் இறுதி நாள் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அதற்கு முன்னதாக திரு. ராமராவ் விழா மைதானத்துக்கு திறந்த மோட்டார்

## பார்வதி பெயரில் உருவாகிறார்

பவனியாக அழைத்து வரப்பட்டார்.

அவரின் இரு மருங்கிலும் அவரது அரசியல் வாரிசு பதவிக்குப் போட்டியிடும் அவரது இருமருமகன்களும் காணப்பட்டனர்.

ஆனால் மக்களின் கண்களோ ராமராவின் அருகில் இன்னொருவரையே தேடின.

ராமராவின் அரசியல் வாரிசை மக்கள் தங்கள் பார்வையால் அடையாளங் காட்டியதாக அன்றைய சம்பவத்தை அவதானிகள் கருதுகின்றனர்.

யார் அவர்? அண்மையில் 71 வயதான ராமராவைத் திருமணஞ் செய்துகொண்ட 38 வயதான லட்சுமி பார்வதி தான் அவர்.

தெலுங்கு—சமஸ்கிருதப் பேராசிரியையான பார்வதி, வெங்கல் சுப்பராவை முதலில் திருமணஞ் செய்திருந்தார். அத்திருமணத்தால் அவருக்கு ஒரு மகன் இருக்கிறான்.

சுப்பராவுடன் அடிக்கடி சென்று ராமராவைச் சந்தித்து வந்த பார்வதி பின்னர் சுப்பராவை விவாகரத்து செய்துவிட்டு ராமராவின் சுயசரிதையை எழுதும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

பின்பு அது காதலாகப் பரிணமித்து தற்போது திருமணத்தில் முடிந்திருக்கிறது.

ஆனால் ஆந்திர அரசியலில் இத் திருமணம் புதிய திருப்பம் ஒன்றைத் தோற்றுவித்திருக்கிறது.

பார்வதி கூறுகிறார்: "எட்டு வயதாக இருந்த போது நான் ராமராவ் நடித்த 'குலேபகாவலி கதா' என்ற படத்தைப் பார்த்தேன். ராமராவை படத்தில் தான் முதன்முதலாக கண்டேன். அன்றே அவரை நான் வணங்கி வர ஆரம்பித்தேன். எனது வீட்டில் சுவாமி அறையில் ஏனைய கடவுள் படங்களுடன் ராமராவின் படத்தையும் வைத்து பூஜை

தீபன்ராஜா

நடத்த ஆரம்பித்தேன். அது இன்றும் தொடர்கிறது"—

பார்வதியின் முதலாவது கணவர் என்ன கூறுகிறார்:

"ராமராவை நானும் பார்வதியும் கடவுளாகவே

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கள மக்களை போர் மனநிலையில் வைத்திருப்பதற்கு அரசாங்கம் உபாயம்!

வடக்கு - கிழக்கில் நடைபெறும் போரில் அரசாங்கம் தோல்வியுறும் என்பதே சிங்கள மக்களின் கருத்து — இவ்வாறு கூறியிருக்கிறார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸநாயக்கா.

வடக்கு - கிழக்கு போரில் இராணுவம் வெல்லும் என்று எவரும் நினைக்க வேண்டாம். இவ்வாறு சிங்கள மக்களுக்கு பொதுக்கூட்டத்தில் வைத்து அறிவித்தவர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா.

**அரசியல்**

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே தேவை. இராணுவத் தீர்வினால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. யுத்தத்தை தங்கள் வருமானத்துக்கான வியாபாரமாக்கி கொண்டவர்களே யுத்தத்தை நீடிக்க விரும்புகிறார்கள். யுத்தம் நின்றால் தங்கள் வியாபாரம் கெட்டுவிடும் என்று கருதுகிறார்கள் — இப்படிக் கூறியவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான சிறிமாவோ பண்டாரநாயக்கா.

இவர்கள் மூவரும் எதிர்க்கட்சிக்காரர்கள். அரசாங்கத்துக்கு எதிராக மக்களைத் திருப்பித் தமக்கு வாக்குத் தேடுவதற்காக சந்தர்ப்பத்துக்கு ஏற்றால் போலக் கருத்துக் கூறினார்கள் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் ஆளுங்கட்சி எம்பியாகத் தெரிவு செய்யப்பட்டு

## கிழக்கு சர்வசன வாக்கெடுப்புக்கு முஸ்லிம், தமிழ் கட்சிகள் முட்டுக்கட்டை

நாடாளுமன்ற சபாநாயகராக இருக்கும் முகம்மதுவும் அதே கருத்தையே வெளியிட்டார். இராணுவத் தீர்வு உகந்ததல்ல. யுத்தத்தில் வெல்ல முடியாது என்றே அவரும் கூறியிருக்கிறார். யுத்தத்தை நிறுத்துவதற்கு வடக்கே சென்று விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கும் தான் தயாராக இருப்பதாகவும் அவர் சொன்னார்.

முகம்மதுவின் வழியில் மத்திய மாகாண ஆளுநர் பி. சி. இம்புலானாவும் வீணான யுத்தத்தில் ஏழைச் சிங்கள இளைஞர்கள் மடிவது குறித்து வருத்தம் தெரிவித்திருக்கிறார். உயர் குழாமைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகள் இராணுவத்தில் சேர்வது குறைவு என்றும் சுட்டிக் காட்டினார்.

இப்படியாக யுத்தத்தின் பாதகங்கள் குறித்தும், அதில் வெல்ல முடியாது என்பது குறித்தும் தெற்கில் இப்போது வெளிப்படையாகப் பேசப்படுகிறது. எதிரணிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி அரச தரப்பில் சிலரும் யுத்தம் குறித்து கண்டிக்கத்தொடங்கி உள்ளனர்:

### சிங்கள மக்களும் உணர்கின்றனர்

அரசியல்வாதிகள் மேடைகளில் செவ்விகளில் கூறுவதை விட சிங்கள மக்களும் யுத்தம் வீணானது. அது வெல்ல முடியாதது என்பதனை ஓரளவேனும் உணர்ந்து வருகின்றனர் எனலாம். யுத்த முனையில் மடிந்து போகும் ஏழைச் சிங்கள இளைஞர்களின் அங்க அடையாளம் தெரியாமல், மூடப்பட்ட பிரேதப் பெட்டிகளில் அவர்களின் சடலங்கள் தெற்கின் கிராமப் பகுதிகளைச் சென்றடையும்போது யுத்தத்தின் பயங்கரத்தை அவர்கள் உணராமல் இருக்க முடியாது.

படைகளில் பணிபுரியும் கிராமப்புறத்துச் சிங்கள இளைஞர்களின் உயிர்களில் அரசாங்கத்துக்கோ, உயர் இராணுவ அதிகாரிகளுக்கோ எவ்வித அக்கறையும் இல்லை என்பதனையும் சிங்கள மக்கள் புரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலீஸாரை விடுவிப்பதில் அரசாங்கம் நடந்து கொண்ட முறையினால், தமது புதல்வர்கள் சிங்கள நாட்டுக்காக உயிர் கொடுக்கிறார்கள் அல்லது அரசாங்கத்தில் உள்ள அரசியல் தலைவர்களின் விம்புக்காகவும், இராணுவ அதிகாரிகளின் பதவி உயர்வுகளுக்காகவும் விலை போகின்றதா என்பதை இதுவரை புரிந்து கொண்டிருப்பார்கள்.

எனினும் மக்களின் கருத்துக்கோ நலனுக்கோ மதிப்பளிக்காத அரசியல் தலைவர்கள் எப்படியாவது தாம் ஆட்சி பீடத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக பல விதமான உபாயங்களையும், உத்திகளையும் கைக்கொண்டு வருகின்றார்கள்.

அந்த உத்திகளில் ஒன்றே பயங்கரவாதத்தை ஒழித்து விடப் போவதாக ஜனாதிபதி விஜேதுங்கா போடும் சன்னதம். தமது பதவியைத் தொடருவதற்கும், ஏனைய ஆட்சிக் குறைபாடுகள், ஊழல்கள், மோசடிகளை மூடி மறைப்பதற்கும் இந்த சன்னத ஆட்டம் பெரிதும் உதவும் என்பதை அவர் ஒரு சில மாதங்களிலேயே படித்துவிட்டார்.

அவர் தொடர்ந்து சன்னதம் ஆடுவதற்கு உடுக்கு அடிக்கிறார்கள் இராணுவ உயர் அதிகாரிகள்! விடுதலைப் புலிகளை ஒடுக்கி விடுவோம். யுத்தத்தில் வென்று காட்டுகிறோம் என்று டி.பி யாருக்கு உருவேற்றியவர்களே இராணுவ உயர்அதிகாரிகள் தான்!

அடுத்த வருடம் ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்கள் நடக்கும் வரை இந்தச் சன்னத ஆட்டத்தைத் தொடர்ந்தால் மேலும் ஆறு வருடங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக் கட்டிலில் அமர்த்துவது இலகுவாகிவிடும் என்பது ஆளுங்கட்சியினரின் கணக்கு. இந்த சன்னத ஆட்டக் காட்சியினால் சிங்கள மக்களைக் கவர்ந்திழுத்து விடலாம் என்ற நம்பிக்கையிலேயே அதற்கான உத்திகளும், உபாயங்களும் வகுக்கப்படுகின்றன.

கொழும்புக்குள் புலிகள் ஊடுருவி விட்டார்கள், தாக்குதல் நடத்தப் போகிறார்கள் என்ற எச்சரிக்கைப் பிரசாரம் ஆளுங்கட்சியினரதும் படை அதிகாரிகளினதும் உத்திகளில் இப்போது முதன்மை வகிக்கிறது. விடுதலைப் புலிகள் தலைநகருக்குள் வந்துவிட்டதாக அடிக்கடி கூறி சிங்கள மக்கள் மத்தியில் ஒரு பயப்பிராந்தியை செயற்கையாக உருவாக்குகிறார்கள்.

சிங்கள மக்கள் மத்தியில் அத்தகைய பயப்பிராந்தியை உண்டாக்கிவிட்டால் இரண்டு வகைகளில் தமக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கலாம் என்பது அவர்களின் முடிவு.

விடுதலைப் புலிகளுடன் போராடத்தான் வேண்டும். அவர்களை ஒழித்தால்தான் தெற்கிலும் பயமில்லாமல் நிம்மதியாக வாழலாம் என்ற மனநிலைக்குச் சிங்கள மக்களைக் கொண்டு வரலாம். வடக்கு-கிழக்கில் நடக்கும் யுத்தம் புலிகளை ஒழிக்கவே நடக்கிறது. ஆகையால் அது தொடரத்தான் வேண்டும் என்று மக்கள் தமக்குள்ளேயே நியாயப்படுத்திக் கொள்ளத் தூண்டி விடலாம்.

வடக்கு – கிழக்குப் போரை சிங்கள மக்கள் நியாயமானது. நடக்க வேண்டியது என்று உணரவைத்து விட்டால் அதனைத் தொடர்வதன் மூலம் தென்னிலங்கையில் நிறைய வாக்குகளைத் தேடிக்கொள்ளலாம் என்பது ஆளுங்கட்சியின் அடிப்படை நோக்கம்.

தேர்தலில் வேறு எந்த விவகாரத்தையும் முன்வைப்பதை விட தமிழர் பிரச்சினையை முன்வைத்தால் வெல்வது சுலபம். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழர் விவகாரத்தை — அவர்களை அடக்கி ஒடுக்குவதில் யார் கெட்டிக்காரர்கள் என்ற

உதயகாந்தன்

போட்டியை — முதன்மைப் படுத்தியே தேர்தலை நடத்தினார்கள்; வென்றார்கள். அதனையே இனி மேலும் கையாள விரும்புகிறார்கள்.

இப்போது தமிழர் விவகாரம் போர் வடிவம் பெற்றுள்ளது. எனவே சிங்கள மக்களை எப்போதும் போர் மனநிலையில் ('மூட்'டில்) வைத்திருக்கவேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது. மண்கிண்டிமலை, கிளாலி போன்ற தோல்விகளின் பின்னரும் கிழக்கை (புலிகளை) துப்புரவு செய்து உள்ளூராட்சி தேர்தல் நடத்தப் போவதாகவும், வடக்கில் தாக்குதல்களை

(5 ஆம் பக்கம் பார்க்க)

**சூரியகாந்தி — உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

# கத்தோலிக்கத் திருச்சபையின் தேசிய மேய்ப்புப் பணி மாநாடு

"அனைத்துலக மக்களே! நமதாண்டவர் கிறிஸ்துவிற்குக் கதவைத் திறந்து விடுங்கள்" வத்திக்கான் நகரில் இருந்துதிருத்தந்தை இரண்டாவது அருளப்ப சின்னப்பர் திருச்சபைக்கும் அனைத்துலகிற்கும் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

கி.பி. இரண்டாயிரம் ஆண்டுகளை முடித்து அடுத்த ஆயிரமாம் ஆண்டின் உதயத்தை எதிர்நோக்கி இருக்கும் வேளையில் — "மீட்பரின் பணி" என்ற தனது சுற்றுமடல் மூலம் இந்த அழைப்பை (இல.39) அவர் விடுத்துள்ளார். இந்த அழைப்பிற்கான உள்ளரங்க புதுப்பித்தலையும் இந்த சுற்றுமடல் எடுத்துக் கூறுகிறது. இந்த அழைப்பை ஏற்று இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை — "தன்னை புதுப்பித்து பகிரும் ஒரு திருச்சபை நோக்கி" — என்னும் கருப்பொருளில் தேசிய மேய்ப்புப் பணி மகாநாடு ஒன்றை

அருட்திரு.ரூபன் மரியாம்பிள்ளை

அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் கண்டி இலங்கா நாயகி தேசிய குருமடத்தில் நடத்த ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.

2ஆம் வத்திக்கான் சங்கம் திருச்சபையைப் புதுப்பிக்கும் நெறிமுறைகளை வெளியிட்ட பின் — இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன் — முதலாவது இலங்கையின் தேசிய மறைப்பணிச் சங்கம் நடைபெற்றது. இரண்டாவது தேசிய நிகழ்வாகத் தான்



இந்த மேய்ப்புப்பணி மகாநாடு — அடுத்த ஆண்டு நடைபெறுகிறது.

இடைப்பட்ட இந்த கால் நூற்றாண்டில் உலகிலும் நம் நாட்டிலும் இடம்பெற்ற பல மாற்றங்கள் எமது திருமறை வாழ்விலும்

(4ஆம் பக்கம் பார்க்க)


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் ஐப்பசி மாதம் 30ஆம் நாள் (15-11-1993) திங்கட்கிழமை காலை 9-18 மணி முதல் 10-23 மணி வரையுள்ள ★ சுபமங்கள வேளையில் ★

காரைநகரைச் சேர்ந்த
திரு. திருமதி அ. அப்புத்துரை
அவர்களின்
சிரேஷ்ட புதல்வன்
**குகதாசன்**
அவர்களுக்கும்

காரைநகரைச் சேர்ந்த
கிளிநொச்சி, சாந்தி வைத்தியசாலை உரிமையாளர்
டாக்டர் கிருஷ்ணர் சுப்பையா
(கொத்மலை உடகெந்தனை பகுதிகளை சார்ந்த பெருந்தோட்டத்துறை முன்னாள் தலைமை வைத்திய அதிகாரி)
திருமதி சிவபாக்கியம் சுப்பையா
தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி
**கலாமதி**
அவர்களுக்கும்

திருவருள் துணையோடு கொழும்பு, கப்பித்தாவத்தை ஸ்ரீ செல்வபாலவிநாயகர் தேவஸ்தானத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து இடம்பெறும் விருந்துபசாரத்திலும் இராப் போசன விருந்திலும் கலந்து ★ சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். ★

இங்ஙனம்:
❊ இரு வீட்டாரின் அழைப்பு ❊

திருமதி அ. அப்புத்துரை

டாக்டர் இ. சுப்பையா,
திருமதி சுப்பையா குடும்பம்.
சாந்தி வைத்தியசாலை, கிளிநொச்சி.

தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்ப முடியாமைக்கு மன்னிக்கவும்.
[சி-6322]


( பாகிஸ்தான் அரசியல் )

# பெனாஸிருக்கு மீண்டும் நெருக்கடி இப்போது சகோதரன் ரூபத்தில்!

[illegible] — சிந்து மாகாணத்தில் உள்ள மொஹஞ்சதாரோ விமான நிலையத்தில் இருந்து முப்பது கிலோ மீற்றர் தூரத்தில் லர்கானா நகரம் உள்ளது.

முன்னாள் பிரதமரும் இராணுவ ஆட்சியாளரால் தூக்கிலிடப்பட்டவருமான ஸுல்பிகார் அலி பூட்டோவின் சொந்த நகரான லர்கானா — அவர் மறைந்து ஒன்றரை தசாப்தத்தின் பின்னரும் — இன்றும் பாகிஸ்தான் மற்றும் பூட்டோ குடும்பத்தினரின் அரசியலிலும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.

பூட்டோவின் புதல்வியான 40 வயது பெனாஸிர் நாட்டின் பிரதமராக இரண்டாவது தடவையாக பதவி ஏற்ற சில தினங்களில், அவரது ஆட்சிக்கு இம்முறை தலையிடி உள்வீட்டில் இருந்தே தோன்றியுள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த சிந்து மாகாண சட்டசபைத் தேர்தலில் லர்கானா தொகுதியில் இருந்து மிர்முர்தாஸா பூட்டோ வெற்றியீட்டினார். வெளிநாட்டில் இருந்து கொண்டு 24 தொகுதிகளில் போட்டியிட்ட அவரால் ஒரு தொகுதியில் மட்டுமே வெற்றியீட்ட முடிந்தது.

அக்காவின் ஆட்சிக்குத் தலையிடி கொடுப்பது என்று 39 வயதான முர்தாஸா பூட்டோ தீர்மானித்து விட்டதை அவர் 16 வருட அஞ்ஞாத வாசத்தை முடித்துக் கொண்டு [illegible] பாகிஸ்தான் திரும்பிய விதம் [illegible]

"தூக்கிலிடப்பட்டாலும் நான் தாயகம் திரும்புவது உறுதி" — என்று முர்தாஸா அறிவித்தபடி — சிரிய ஜனாதிபதி ஹபாஸ் அல் ஆஸாத் கொடுத்த தனி விமானத்தில் வந்திறங்கிய போது, இஸ்லாமபாத் விமான நிலையமே போர்க்களமாகியது.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவியும் தூக்கிலிடப்பட்ட ஸுல்பிகார் அலி பூட்டோவின் மனைவியுமான



பெனாஸிர்

நுஸ்ரத், தனது மகனை வரவேற்க விமான நிலையம் சென்றிருந்தார். தாயாரைச் சந்திக்க பொலீஸார் முர்தாஸாவுக்கு சில நிமிட அவகாசம் வழங்கினார்கள். அதன் பின்னர் அவர் கைது செய்யப்பட்டு சிந்து மாகாண சிறை ஒன்றுக்குக் கூட்டிச் செல்லப்பட்டார்.

### முர்தாஸாவின் பின்னணி

தந்தை தூக்கிலிடப்பட்டதைத் தொடர்ந்து, முர்தாஸா அல் ஸுல்பிகார் என்ற இரகசியக் குழு ஒன்றுக்கு தலைமை வகித்து வெளிநாடுகளில் பல குண்டுகளை வெடிக்க வைப்பதில் ஈடுபட்டார் என்றும்—

1981 இல் பாகிஸ்தான் விமானம் ஒன்றை காபூலுக்கும் டமஸ்கஸுக்கும் கடத்திச் சென்றதில் சம்பந்தப்பட்டிருந்தார் என்றும் பாகிஸ்தான் பொலீஸார் குற்றஞ் சாட்டினார்.

அவரைப் பொலீஸார் தேடவே, அவர் தலைமறைவானார்.

சிரிய நாட்டுப் பெண் கன்வா என்பவரைத் திருமணஞ் செய்து கொண்ட முர்தாஸாவுக்கு ஏழு வயதில் புதல்வன் இருக்கிறான். அவன் பெயர் ஸுல்பிகார் அலி பூட்டோ ஜுனியர்.

பயங்கரவாதச் செயல்களில் சம்பந்தப்பட்டதாக முர்தாஸா மீது பாகிஸ்தான் நீதிமன்றத்தில் பல வழக்குகள் இருப்பதால்தான் அவரை பொலீஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமது மகளான பெனாஸிரின் ஆட்சியால், தனது மகனான முர்தாஸாவுக்கு மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று நுஸ்ரத் பெரும் முயற்சி செய்தார். ஆனால் பெனாஸிர் அதற்கு இணங்கவில்லை. அதனைத் தொடர்ந்து மகனின் பக்கம் அம்மா நுஸ்ரத் சாய்ந்து விட்டார்.

### குடும்ப பிளவுக்கு காரணம் என்ன?

பாகிஸ்தான் அரசியலில் பூட்டோ குடும்பத்துக்கு தனிச் செல்வாக்கு உண்டு.

பூட்டோ குடும்பத்தினர் ஒற்றுமையாக இருக்கும் வரை அந்தச் செல்வாக்கை உடைப்பது கஷ்டம் என்பது அரசியல் எதிரிகளின் கணிப்பு.

இதற்கு தம்பி முர்தாஸா பலியாகி விட்டார் என்பது பிரதமர் பெனாஸிரின் கருத்தாக உள்ளது.

எனினும்—

குடும்பத்தில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு அம்மாவுக்கும் மகளுக்கும் இடையே நீண்டகாலமாக நிலவி வந்த கருத்து வேறுபாடுகளே காரணம் என்று விஷயம் தெரிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

பெனாஸிரின் அரசியலில் பெனாஸிரின் கணவரான அஸிப் சர்தாரியின் ஆதிக்கம் மோலோங்கியிருப்பதாக நுஸ்ரத் குற்றஞ்சாட்டுகின்றார்.

சர்தாரியின் வற்புறுத்தல் காரணமாகத்தான் முர்தாஸாவுக்கு மன்னிப்பு வழங்க பிரதமர் பெனாஸிர் மறுத்து விட்டார் என்பது நுஸ்ரத்தின் இன்னொரு குற்றச்சாட்டு.

ஆண் ஆதிக்கம் நிறைந்த பாகிஸ்தான் சமூகத்தில் தம்பி முர்தாஸாவினால் எழுந்துள்ள சவாலை சமாளிக்க முடியுமா என்ற கவலையும் பெனாஸிருக்கு எழுந்துள்ளது.

குடும்பத்தில் ஆண்வாரிசுக்குத்தான் மக்கள் மத்தியில் ஆதரவு அதிகம் என்பது பெனாஸிருக்கு நன்கு தெரிந்த விஷயம் என்று அவதானிகள் கூறுகின்றனர்.

பூட்டோ குடும்பத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிய சந்தர்ப்பம்!

## தீபாவளி மலிவு விற்பனை

நவம்பர் 1ஆம் திகதி முதல்
12 ஆம் திகதி வரை

சகலவிதமான
கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள்
முதலியன மலிவு விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

## அல்டி

269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6515)



## மாபெரும் கைப்பணிக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

சாவகச்சேரி பனை – தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மகளிர் அமைப்பின் கைவண்ணத்தில் உருவான பனை ஓலை கைப்பணிப் பொருட்களும், அலங்கார வேலைப்பாடுகளுடனான தையற் பொருட்களும் காட்சிப்படுத்தப்படுவதோடு, மலிவு விலையில் விற்பனையும் செய்யப்படும்.

கண்காட்சி: 06 - 11 - 1993,
07 - 11 - 1993
(சனி, ஞாயிறு)
மலிவு விற்பனை: 07 - 11 - 1993
இடம்: சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம்.
நேரம்: மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

நிர்வாகிகள்,
பனை - தெ.வ.அ.கூ. சங்கம்.
சாவகச்சேரி.

[27918]


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி நாகம்மா பொன்னையா

தோற்றம்: 22—05—1923
மறைவு: 08—10—1993

''மாதமொன்று மறைந்தாலும் – உங்கள்
மதிவதனம் எம் மனதை விட்டகலாது
ஆலமரமாயிருந்தீர்கள்—அதில் வாழும்
பறவைகளாய் நாமிருந்தோம்
கொடுங் காலன் சிரித்தான்
கதறி நாம் துடிக்கின்றோம்
பூவுலகு உள்ளவரை - உங்கள்
புகழுடம்பு மறையாது
பூதவராயர் காலடி நீங்கள் சேர
அம்பாள் துணை வேண்டி நிற்போம்''

எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அனுதாபம் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (07-11-1993) ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் சாந்தி பூசைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். இவ்வைபவம் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பொ. நடராசா
(மகன்)

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(27925)

## கத்தோலிக்க திருச்சபையின்......

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பல சவால்களையும் கேள்விக் குறிகளையும் தோற்றுவித்துள்ளன.

போராட்டங்களும் நாடுகளின் பிரிவினையும், இடம்பெயர்ந்தோர் பிரச்சினைகளும் ஒழுக்க சீர்குலைவுகளும், வறுமையும் மட்டுமீறிய நன்னலப்பற்றும் என்ற உலகளாவிய பிரச்சினைகளும், வடக்கு – தெற்கு பிரிவினை, தேசிய இனக்குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் அகதிகள் — அவர்களை ஒட்டிய பிரச்சினைகளும் விடை காண காத்துக் கிடக்கின்றன.

ஒரு தேசிய திருச்சபை என்ற மட்டில் இவற்றை மதிப்பீடு செய்து, கிறிஸ்துவில் எம் விசுவாசத்தை ஆழப்படுத்தி இந்த சவால்களையும் நற்செய்திப் பணிக்கான வாய்ப்புக்களையும் தூய ஆவியின் வழிகாட்டுதலில் உய்த்துணர்ந்து வரப்போகும் ஆண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்களுக்காக எம்மைப் புதுப்பித்தலே இந்த மகாநாட்டின் நோக்கம் என இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

''பழம்பெருமை வாய்ந்த எமது யாழ். மறைவட்டம் போர் நடவடிக்கைகளால் நலிவுற்று, மறைவாழ்வு தாக்கப்பட்டு இருப்பினும் ஒரு மறைப்பணி மகாநாட்டை நடத்தி எம்மைச் சூழ்ந்துள்ள இன்னல்களுக்கு முகம் கொடுத்து, விசுவாசத்தை உறுதிப்படுத்தி பகிர்ந்து வாழும் அன்புச் சமூகமாக செயற்பட ஆசிக்கிறோம்'' — என யாழ். மறைவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தமது சுற்றுமடலில் தெரிவித்திருக்கிறார்.

யாழ். மறைவட்ட மேய்ப்புப்பணி மகாநாட்டை மாசி—94இல் குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் ஆகியோர் இணைந்து கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நடத்துவார்கள்.

யாழ். மேய்ப்புப்பணி மகாநாட்டின் முதற் கட்ட வேலைகள் ஐப்பசி 3ஆம் நாள் புதுப்புனல் எனப் பெயரிடப்பட்ட எழுச்சி ஞாயிறு வாரத்தோடு ஆரம்பமாகி நிறைகட்டத்தை அடைந்துள்ளது. புதுப்புனல் — புதிய நீர் ஊற்று — என்ற கருத்தோடு யாழ். மறைக் கோட்டம், மானிப்பாய் மறைக் கோட்டம், பருத்தித்துறை மன்றக் கோட்டம், கிளிநொச்சி மறைக்கோட்டம் என்ற யாழ். மறைவட்டத்தின் நான்கு மறைக்கோட்டங்களிலும் இந்த எழுச்சி வாரம் நடத்தப்பட்டது.

★ வேதாகமம்
★ நற்செய்தி அறிவிப்பு, கிறிஸ்தவ ஒன்றிப்பு, உரையாடல்
★ திருவழிபாடு
★ குருக்கள், துறவியர், குருமாணவர்
★ பங்குத் திருச்சபை
★ பொதுநிலையினர், இளைஞர், குடும்பம்
★ சமூகத் தொடர்பு
★ நீதி, சமாதானம், மனித முன்னேற்றம்
★ கல்வி, மறைக்கல்வி
★ கலை, கலாசாரம் —

என்ற பத்து தலைப்புக்களில் ஒவ்வொரு பங்கு ரீதியாக உரைகளும் கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டு, ஒவ்வொரு தலைப்பிற்கும் ஒரு வினாக் கொத்தும் இறை மக்களிடம் கொடுத்து அவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டன.

இவ்வினாக் கொத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டு கருத்துக்கள் மகாநாட்டின் ஆய்விற்காக அனுப்பி வைக்கப்பட இருக்கும் வேளையில், இன்னுமொரு கேள்விக் கொத்து நிரப்பப்பட உள்ளது. மகாநாடு பற்றிய கருத்தரங்குகள், கூட்டங்கள், செப வழிபாடுகள் என்பன தொடர்ந்தும் நடத்தப்பட உள்ளன.

இவ்வேளை நாம் முகம் கொடுக்கும் எமது மண்ணின் பிரச்சினைகளுக்கு நடுவில் யாழ். மறைவட்ட மகாநாடு வெற்றியளிக்க உழைப்போம்.

★

## ஆந்திர....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)
வணங்கி வந்தோம். அவர் கடவுளாக இருந்து எமது திருமணத்தை உடைந்து போகாமல் காப்பாற்றி அல்லவா இருக்கவேண்டும்?''

—இவ்வாறு நாட்டுப்பாடல் கலைஞரான சுப்பராவ் தெரிவித்தார்.

ராமராவ் இதற்கெல்லாம் பதிலாகக் கூறுவது:

''தேசிய நலன்கருதி நான் பார்வதியைத் திருமணம் செய்தேன். நான் ஒரு இரும்பு மனிதன். மதுவே பாவிக்காதவன். எந்தக் காதல் விவகாரத்திலும் நான் சிக்கிய தில்லை';—

அப்படியானால்—

ராமராவ்—பார்வதி திருமணத்தை ஒரு அரசியல் திருமணமாகவே ஆந்திர அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

திருமணத்தைத் தொடர்ந்து ஆந்திர அரசியலிலும் தெலுங்கு தேசம் கட்சியிலும் இடம்பெற்று வரும் சம்பவங்கள் இக்கருத்தையே வலியுறுத்துவதாக உள்ளன.

ராமராவ் – பார்வதி திருமணம் சமூக சீர்திருத்த நடவடிக்கை என்று தெலுங்கு தேசம் எம். பியான ரேணுகா சௌத்திரி பாராட்டினார்.

இப்போது தெலுங்கு தேசப் கட்சி பிளவுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் வாரிசாக வருவதற்கு முயற்சித்துவரும் ராமராவின் மருகர்கள் இருவரும் ஓரங்கட்டப்பட்டு விட்டனர். ராமராவின் பிள்ளைகளும் ஒதுங்கி விட்டனர்.

நடப்பதை எல்லாம் பார்த்தால்—

தமிழ்நாட்டில் எம். ஜி. ஆர். மறைந்த பின்னர் அவரது வாரிசாக ஜெயலலிதா வந்து ஆட்சி நடத்துவதைப் போன்று—

ஆந்திர அரசியலிலும் அம்மாவின் ஆட்சி ஏற்படும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக 'இந்தியா ருடே' கருத்து வெளியிட்டிருக்கிறது.

★

## பெனாஸிருக்கு....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பெண் ஆதிக்கத்துக்கு தொடர்ந்தும் இடமளிக்கலாமா? என்பது தொடர்பான மோதலாகவே பெனாஸிர் - முர்தாஸா மோதல் உருவாகியுள்ளது என்றும் கூறலாம்.

### பெனாஸிர் சந்தித்த நெருக்கடிகள்

ஸியா-உல்- ஹக்கின் தலைமையிலான இராணுவ ஆட்சியினால் ஸுல்பிகார் - அலி- பூட்டோ தூக்கிலிடப்பட்ட பின்னர் பூட்டோ குடும்பத்தினர் பல நெருக்கடிகளைச்சந்தித்தனர்,

ஸியா-உல் - ஹக்கின் மறைவைத் தொடர்த்து குலாம் இஷாக்கான் ஜனாதிபதியானார். தேர்தல் நடந்தது. பூட்டோவின் அலை வீசியது. பெனாஸிர் தலைமையில் புதிய ஆட்சி ஏற்பட்டது.

இந்த ஆட்சிக்கு இறுதியில் நவாஸ் ஷெரிப் அரசை ஊழல் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி ஜனாதிபதி கலைத்தார்.

கடந்த மாதம் நடந்த தேர்தலில் பதவிக்கு வந்துள்ள பெனாஸிருக்கு இப்போது நெருக்கடி சகோதரர் வடிவில் வந்துள்ளது. இதன் பின்னணியில் நாவாஸ்ஷெரிப் உள்ளார் என்று கூறப்படுகிறது.

குலாம் இஷாக்கான் பல முனைகளில்நெருக்கடிகொடுத்தார். அப்போது பஞ்சாப் மாகாண முதலமைச்சராக இருந்த நவாஸ் ஷெரிப்பின் தூண்டுதலால் பெனாஸிரின் அரசை ஜனாதிபதி கலைத்தார். பின்னர் தேர்தல் நடந்தது. நவாஸ் ஷெரிப் தலைமையில் புதிய அரசு ஏற்பட்டது. பெனாஸிர் மற்றும் அவரது கணவர் அஸிப் சர்தாரி மீது ஊழல் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

### இலங்கை - பாகிஸ்தான்

பாகிஸ்தான் அரசியல் குடும்பச் சண்டையில் இலங்கைஅரசியலின் சாயலும் தென்படுகிறது.

இங்கு — சுதந்திரக் கட்சித் தலைமைக்கான குடும்பச் சண்டையில் அக்காவும் தம்பியும் ஈடுபட்டனர்.

சந்திரிகாவுக்கு ஆதரவாக அம்மா செயல்பட்டார். அநுராவை ஒதுக்கினார். அதனால் அவர் வெளியேறினர்.

காரணம் — சிறிமா பிரதமராக ஆட்சி நடத்தியவர். அதனால் தமது கட்சியில் பெண் ஆதிக்கத்தை நிலைநாட்ட அவர் விரும்பியதாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் பாகிஸ்தான் அரசியலில் கணவனுக்குப் பின்னர் நுஸ்ரத் பிரதமராகவில்லையே!

மறைந்த பிரதமர் பூட்டோவின் ஆண்வாரிசுகள் எல்லாம் வெளிநாடுகளில் இருந்தபடியால்தான் நுஸ்ரத் மகளை அரசியலில் ஈடுபடுத்தினார் என்றும் கூறப்படுகிறது.

எனவே பெண் ஆதிக்கம் நிறைந்த அரசியலை முடிவுக்குக் கொண்டு வரும் ஒரு மோதலாகவும் பாகிஸ்தான் மக்கள் கட்சியில் ஏற்பட்டுள்ள தலைமைப் பதவிக்கான போட்டியை எடுத்துக் கொள்ள முடியும்.

★


## சிறுவர்களுக்கு-

'தீபாவளி வாழ்த்து'க்குப் பதிலாக,

இம்முறை
'வரதர் கதை மலர்'
நூல் ஒன்றை வாங்கி அனுப்புங்கள். உபயோகமாக இருக்கும்.

★ வரதர் கதை மலரில் இதுவரை மூன்று நூல்கள் வெளிவந்துள்ளன.
- அவன் பெரியவன்
- இராமன் கதை
- போக்கிரி முயலாரின் சாகசங்கள்

சிறுவர்கள் விரும்பிப் படிக்கக் கூடியவை
ஒவ்வொன்றும் விலை ரூபா 12/ எங்கும் கிடைக்கும்

(சி/6528)


## கேள்வி அறிவித்தல்

### யாழ். செயலகத் தேவைக்கான தளபாடங்கள் செய்து வழங்குதல்

மேற்படி வேலைக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

1. இவ்வேலை சம்பந்தமான முழு விவரங்களும் இச் செயலகத்தில் களஞ்சிய நலன்புரிக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
2. அரசாங்கத்தில் பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்கள் மட்டும் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கலாம்,
3. கேள்விப்படிவங்கள் மீளளிக்கப்படும் கட்டுப்பணமாக ரூபா 250/– செலுத்தி யாழ். அரசாங்க அதிபரிடமிருந்து 08–11–1993ஆம் திகதி தொடக்கம் 12–11–1993ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 10 மணி தொடக்கம் பி. ப. 2 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
4. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் யாழ். அரசாங்க அதிபர், மாவட்ட ஆணையாளர் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு 19–11–1993ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முன்பாக கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலமாக அல்லது அதற்கென இச்செயலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இட வேண்டும்.

கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும் வேலையின் பெயர் பத்திரம் அடங்கிய தபால் உறையின் இடது பக்கத்தில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

க. மாணிக்கவாசகர்,
அரச அதிபரும்,
மாவட்ட ஆணையாளரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.
05-11-1993

(சி-6328)


## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கணணி கல்வி நிலையங்களுடன்

இணைந்து நடத்தும்

## கணணி இலத்திரனியல் கண்காட்சி

- கணணி இலத்திரனியல் பற்றிய அறிமுகம்
- கணணியின் பிரயோகங்கள்
- கணணியில் விந்தைகள்
- சிறுவர்களுக்கான கணணி விளையாட்டுக்கள்
- இலத்திரனியல் கணணி தொழில் நுட்பம்

### பங்குபற்றும் நிறுவனங்கள்:

- யாழ். பல்கலைக்கழகம்
- தொழில் நுட்பக் கல்லூரி - வட்டுக்கோட்டை
- கணணி விஞ்ஞான கல்வி நிலையம் - (C. S. A.)
- வணிக முகாமைத்துவக் கல்லூரி
- யுனிக்கோ கல்வி நிறுவனம்
- வட இலங்கை தொழில் நுட்ப நிறுவனம்
- பற்றிசியன் இன்ஸ்ரிரியூற்

இடம்: யாழ். பல்கலைக்கழகம்
காலம்: 1993 நவம்பர் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை
பிரவேசம்: ரூபா 10/- சிறுவர்களுக்கு ரூபா 5/-

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[27915]



## இலவச பற்சிகிச்சை
(FREE DENTAL SERVICE)

தமிழீழ மக்களின் நலன் கருதி பின்வரும் தினங்களில்
எமது வைத்தியசாலையில் இலவச பற் சிகிச்சை அளிக்கப்படும்.

07 - 11 - 1993
14 - 11 - 1993 — ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை

"எம் கடன் பணி செய்வதே"

## வில்லியம் ஹாவே

### தனியார் மருத்துவமனை

WILLIAM HARVEY PRIVATE HOSPITAL

NO. 17, KANDY ROAD,
CHUNDIKULI,
JAFFNA

இல. 17, கண்டி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[27923]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## கல்விச் சொத்து

இராணுவ நடவடிக்கைகள் என்ற பெயரில் குடா நாட்டு மக்களின் உயிர், உடைமைச் சொத்துக்களை அழித்தும், அவர்களது தாயக நிலத்தை கபளீகரம் செய்தும் வரும் சிங்கள அரசு, அழிக்க முடியாத அவர்களது சொத்தான—கல்விச் சொத்தை—அறிவுப் பலத்தை—தளர்ச்சியடையச் செய்வதிலும் முனைப்பாக நிற்கின்றது.

★ யாழ் மாவட்டத்தில் 5ஆம் ஆண்டு வரையான வகுப்புக்களைக் கொண்ட 25பாடசாலைகளில் பெரும்பாலானவை இராணுவ நடவடிக்கைகளால் செயலிழந்து வேறு இடங்களில் தற்காலிகமாக இயங்குகின்றன.

★ அவற்றில் பயிலும் மாணவர்கள் அடிப்படைச் சுகாதார வசதிகள், தளபாட வசதிகள் கூட இல்லாமல் சிரமமுறுகின்றனர்.

★ இவ்வாறு இயங்கும் பாடசாலைகளின் மாணவர்களுக்கு அவசர—அத்தியாவசிய—வசதிகளை —தற்காலிக கொட்டகைகள் மலசல கூடங்கள் போன்றவற்றை — அமைத்துக் கொடுக்க நிதி தேவையென்று யாழ் கல்வித் திணைக்களம் கோரிய போது வெறும் இருபது லட்சம் ரூபா நிதி மட்டும்—கண்துடைப்பு நடவடிக்கையாக— அரசால் வழங்கப்பட்டிருக்கிறது.

★ குடாநாட்டில் மாணவர் கல்வி பயிலுவதற்கு தேவையான பென்சில், கொப்பி போன்றவை கிடையா; கிடைத்தாலும் உச்சவிலை.

★ இரவில் படிப்பதற்கு மின்சாரம் இல்லை. விளக்கெரிக்க மண்ணெண்ணெய் இல்லை.

★ திடீர் திடீரென இடம் பெறும் விமானக் குண்டு வீச்சுகள் ஷெல் தாக்குதல்கள் போன்றவற்றின் மிரட்டல்களுக்கு மத்தியில் பாடசாலைகளில் அச்சசூழ்நிலையில் கல்விப் போதனை.

★ பாடசாலைகளுக்குச் செல்லும் சிறார்கள் விமானக் குண்டு வீச்சுக்களில் உடல் சிதறிப் பலியாவது சகஜமாகி விட்ட நிலை. போதாக்குறைக்கு, இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் சிரமப்பட்டு பயின்று, நல்ல பெறுபேறுகளைப் பெற்றாலும் அதன் பயனைப் பெற முடியாமல்—பல்கலைக்கழக அனுமதி முறையில் காலை வாரி விடும்—குளறுபடியான வெட்டுப் புள்ளி முறைகள்.

★ இவற்றையெல்லாம் மீறி, தேறி உயர்கல்வி அல்லது அடுத்த கட்ட போதனை பெறுவதற்காகக் கொழும்புக்குச் சென்றால் அங்கு கேட்டுக் கேள்வியின்றி, வகை தொகையின்றி தமிழ் இளைஞர்கள்—அப்பாவி மாணவர்கள் உட்பட —படையினரால் கண்மூடித்தனமாகக் கைது செய்யப்பட்டு மாதக்கணக்கில் தடுப்பு முகாம்களில் அடைக்கப் படுகின்றனர்; அல்லது மர்மமான முறையில் காணாமற் போகின்றனர்.

— இவை எமது கல்வித் துறை தொடர்பாக அண்மையில் வெளிவந்துகொண்டிருக்கும் சில செய்திகள்.

எமது பெருஞ் சொத்தாகிய கல்வியை எம்மிடமிருந்து பறிக்க சிங்கள அரசு நேரடியாகவும் மறைமுகமாகவும் எடுக்கும் நடவடிக்கைகளே மேற் சொன்ன நிகழ்வுகளுக்குக் காரணம்.

கல்வி அறிவைப் பெறும் அவாவில் காத்து நிற்கும் எமது மாணவ சமுதாயம் இந்நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அழியாச் சொத்தாகிய கல்விச் சொத்தை நாம் இழக்காமல் இருப்பதற்கு எமக்கென ஒரு தாயகம், எமது தாயகத்தில் எங்கள் அரசு, அந்த அரசால் எங்களுக்கென வகுக்கப்பட்ட ஒரு கல்விக் கொள்கை என்ற உறுதிப்படுத்தப்பட்ட காவலரண்கள் தேவை.

அதனை மனதில் வைத்து—எமது மாணவர்கள் கல்விக்காகப் போராடும் தன்மையைப் பெறவேண்டும்.

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், நவ. 7

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் அருள்மிகு கந்தசாமி கோவிலில் ஞாயிறு தோறும் நடைபெறும் நற்சிந்தனைக் கருத்தரங்குத் தொடரில் ''குமரகுருபரரின் சிந்தனைகள்'' என்னும் பொருளில் திருமதி பவளராணி கணேசலிங்கநாதன் இன்று விரிவுரையாற்றுவார். விரிவுரை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

விரிவுரையைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை கலாநிலையத்தில் பண்ணிசை வகுப்புகள் நடைபெறும். (அ)

★ ★ ★

வண்ணார்பண்ணை கிழக்கு கலட்டி, அருள்மிகு வீரசக்தி விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் புதன்கிழமை காலை 8-46 மணிக்கும் 10-42 மணிக்கும் இடையில் நடைபெறும்.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்குப் பின்னர் எண்ணெய் சாத்துதல் இடம்பெறும். (அ)

## செயன் முறை பரீட்சைகள்

கடந்த ஆகஸ்ட்டில் நடைபெற்ற ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையின் கர்நாடக சங்கீதம், பரதநடனம் ஆகிய பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் இன்று கல்வி அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டு அதிபர்களால் உரியவர்களுக்கு வழங்கப்படும்.

மேற்படி இரு பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (த-5)

# காஷ்மீர் பிரச்சினை குறித்து இந்தியா - பாக். பேச வேண்டும்

## அமெரிக்கா கோருகிறது

மணிலா, நவ. 7

காஷ்மீர் பிரச்சினை குறித்து இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சு நடத்துவதை அமெரிக்கா விரும்புகிறது.

அமெரிக்காவின் துணை வெளியுறவு அமைச்சர் திரு. பீற்றர் அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதரிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

காஷ்மீர் இந்தியாவின் நிரந்தரப்பகுதி என அமெரிக்கா கருதாது என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கடந்த வாரம் கூறியிருந்ததை அடுத்து அதனை இந்திய அரசும், கட்சிகளும் பத்திரிகைகளும் கடுமையாக விமர்சித்திருந்தன.

அதனை அடுத்து இந்தியாவை சாந்தப்படுத்தும் ஒரு முயற்சியாகவே அமெரிக்கா அந்தக் கடிதத்தை அனுப்பியிருப்பதாக கருதப்படுகிறது. (இ-5)

படையினர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்படும் பொருள்களைக் கப்பலில் ஏற்றுவதற்கு பல நாட்கள் செல்கின்றன. அதனால் கப்பல்களும் நீண்ட நாட்கள் துறைமுகத்தில் வீணே தாமதித்து நிற்க வேண்டி உள்ளது.

நேற்று பருத்தித்துறையை வந்தடைந்த 'குமண' கப்பலில் வழமையை விட குறைவாகவே ஆயிரத்து 900 மெற்றிக் தொன் பொருள்களே துறைமுகத்தில் வைத்து ஏற்றப்பட்டன என்றும் இவற்றை ஏற்ற 18 நாட்கள் பிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வழமையாக 'குமண' கப்பலில் 3200 மெற்றிக் தொன் பொருள்கள் ஏற்றி வருவதுண்டு.

இம்முறை 'குமண' கப்பலில் ஏற்றுவதற்காக லொறி ஒன்றில் துறைமுகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட திப்பெட்டிகளை படையினர் பிரித்து சோதனையிட இரண்டு நாட்கள் சென்றதாம்.

இதேவேளை —

கப்பலில் பொருள்களை ஏற்றுவதற்காக துறைமுகத்துக்கு அவற்றை எடுத்துச் செல்பவர்களும் படையினரின் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

கடந்த வாரம் பொருள்களை ஏற்றச் சென்ற மூவர் படையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

## கைப்பணி கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 7

சாவகச்சேரி பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மகளிர் அமைப்பு உற்பத்தி செய்த கைப்பணிப் பொருள்கள், தையல் பொருள்கள் ஆகியவற்றின் கண்காட்சி ஒன்று சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் நேற்று ஆரம்பமாகி இன்று ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறுகிறது. (க)

உலகிலே...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பகுதி மக்கள் குறித்து அவதூறாகப் பேசிக்கொண்டும் அமைச்சரவையில் அங்கம் வகிக்க உலகில் எங்காவது அமைச்சர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்களா?'

''அரசாங்க அமைச்சராக இருந்து கொண்டு அரசாங்கத்தையே கண்டித்துப் பேசி வரும் உத்தியை திரு. தொண்டமான் ஏன் கடைப்பிடித்து வருகிறார் என்பதை விளங்கிக் கொள்வது அவ்வளவு கடினமான காரியமல்ல.

அடுத்த ஆண்டில் முக்கிய தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அதற்கு முன்னர் தம்மை அமைச்சர் பதவியில் இருந்து அரசாங்கம் பதவி நீக்கம் செய்யவேண்டும் என்ற முயற்சியில் தொண்டமான் ஈடுபட்டிருக்கிறார். அவர் கடைப்பிடித்து வரும் உத்தியின் இலக்கு இதுவே.

எதிர்வரும் தேர்தல்களில் தமது 7 லட்சம் வாக்குகள் வங்கியைக் காட்டி கூடுதல் பலனை அவர் அடையலாம் அல்லவா! — என்று அவ்விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

## வாகரை தடை நீடிக்கிறது

யாழ்ப்பாணம், நவ. 7

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பகுதிக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதை படையினர் தொடர்ந்து கட்டுப்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகரை, மாங்கேணி, காயங்கேணி பகுதிகளில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம்கள், சோதனை நிலையங்கள் ஊடாக உணவு, எரிபொருள் என்பவற்றை எடுத்துச் செல்வதை படையினர் கட்டுப்படுத்தியுள்ளனர்.

மின் விநியோகம் துண்டிக்கப்பட்ட அந்தப் பகுதிக்குள் பற்றரிகளைக் கொண்டு செல்வதும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

கூட்டுறவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் தகுதியுடைய அனைவருக்கும் அனுமதி அட்டைகள் கிடைத்த பின்னர் வேறு ஒரு தினத்தில் அந்தப் பரீட்சையை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. (இ-5-216)

## தெரிவுக்குழு.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் விருப்பத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ராஜா கொல்லுரேயும் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த அதாவுட செனிவிரத்தினாவும் கொண்டு வந்த திருத்தமும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இறுதி அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையிலேயே ஜனவரியில் கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று கூறப்படுகிறது. (இ-6)

# சிங்கள மக்களை போர்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தி சிவில் நிர்வாகத்தை உண்டாக்கப் போவதாகவும் வீரப்பிரதாபங்கள் பேசுவது அதற்காகவே!

ஏதோ ஒரு வகையில் சிறிய இராணுவ வெற்றி கிடைத்து விட்டாலும் அதனை முதலாக வைத்து தேர்தலில் வெல்வதே அரசின் திட்டம். அதற்காகவே இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாதப் பிரச்சினையே உண்டு என்ற சாத்தான் வேதம் ஓதப்படுகிறது.

இத்தகைய பின்னணியில்—

தமிழர்களும் பெரிய யுத்தம் ஒன்றை எதிர்கொள்வதற்குத் தயாராக வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. அமைதிக்கான வாய்ப்பு முற்றாக மூடப்பட்டுவிட்டது. ஆயுதப் போராட்டம் எவ்வாறு தவிர்க்க முடியாதது ஆயிற்றோ அதேபோல முழு அளவிலான போரும் தவிர்க்க முடியாதது ஆகுகிறது. விஜேதுங்கா அரசாங்கம் ஆக்கிவருகிறது.

*சர்வசன வாக்கெடுப்பில் அவசரம்*

போரை நடத்தும் போதே வடக்கு - கிழக்கைப் பிரித்து விடவேண்டும் என்பது விஜேதுங்கா அரசின் நிரந்தரக் கொள்கை. போரில் வெல்ல முடியாவிட்டாலும் தமிழர் தாயகத்தைப் பிரித்து விட்டால் தேர்தல் வெற்றி நிச்சயம் என்பதையும் மனதில் வைத்தே அரசு செயற்படுகிறது.

அதனாலேயே கிழக்கில் முதலில் உள்ளூராட்சித் தேர்தலையும், அதன் பின்னர் வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றிய சர்வசன வாக்கெடுப்பையும் இரண்டு மாதங்களில் வைக்கப் போவதாக டி. பி. யார் மேடை மேடையாக முழங்குகிறார்.

யுத்தம் நடக்கும் போதே சர்வசன வாக்கெடுப்பை நடத்தினால் முடிவு அரசுக்குச் சார்பாக அமைவது நிச்சயம். தமிழர்கள் இடம்பெயர்ந்த நிலையில், சிங்களவர்கள் பெரும் எண்ணிக்கையில் கிழக்கில் குடியேற்றப்பட்ட நிலையில், இராணுவ நிர்வாகத்தின் கீழ் இலகுவாகத் தேர்தல் மோசடிகளைச் செய்யக்கூடிய நிலையில் வாக்கெடுப்பு நடந்தால் பிரிவதற்கு விருப்பம் என்றே வாக்கெடுப்பு முடிவு அமையும். எனவே இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிட்டால் வடக்கு - கிழக்கைப் பிரித்து தமிழர் தாயகத்தைத் துண்டாடி, கிழக்கை முற்றாகச் சிங்களவர் பிரதேசமாக்க முடியாது.

அதனாலேயே காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள ஐ. தே. க. அரசு அவசரப்படுகிறது. வடக்கு - கிழக்கைப் பிரித்துவிட்டால் அதனை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வைத் திணிப்பதும் இலகுவாகிவிடும்.

*முஸ்லிம்கள் பலிக்கடாக்கள் ஆவர்*

இந்தச் சர்வசன வாக்கெடுப்பை கிழக்கில் செயற்படும் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் எதிர்க்க முனைந்திருப்பது அரசுக்கு இது விடயத்தில் பெரும் முட்டுக்கட்டையாக அமையக் கூடும்.

கிழக்கில் தேர்தல் நடத்துவது என்பது முஸ்லிம்களை பலிக்கடாக்களாக்குவதற்கே என்று முஸ்லிம் காங்கிரஸ் போர்க்கோலம் பூண்டிருக்கிறது.

கடந்த காலங்களில் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட பயங்கரவாதக் கசப்புகள் மறைந்து மீண்டும் பரஸ்பரம் புரிந்துணர்வும் நல்லெண்ணமும் துளிர்க்கத் தொடங்கியிருக்கும் இன்றைய காலகட்டத்தில், கிழக்கில் அபிப்பிராய வாக்கெடுப்பும் தேர்தலும் நடத்த அரசு அவசரப்படுவது தமிழ்— முஸ்லிம் உறவை மீண்டும் சீர்குலைப்பதற்கே உதவும்— என்று முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த அறிக்கை ஒன்றில் ஆணித்தரமான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

*கோமாளி நாடகம்*

அதுபோலவே கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதற்கு அரசு அவசரப்படுவதனை மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி எம். பீயான பிறின்ஸ் காசி நாதரும் சாடியுள்ளார்.

அரசின் அந்த நடவடிக்கையில் முட்டாள் தனமான கோமாளி நாடகம் ஒன்றில் காணப்படும் சகல அம்சங்களும் உள்ளதாக அவர் வர்ணித்திருக்கிறார்.

அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் பின்வருமாறு கண்டித்திருக்கிறார்:

கிழக்கு மாகாணத்தில் அரசு ஆதரவுடன் சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறது. இம் மாகாணத்தில் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கையிலும் தெரிவு செய்யப்படும் அவர்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி காணப்படுகிறது. ஆகவே எந்த தேர்தல் இடாய்பை அடிப்படையாகக் கொண்டு சர்வசன வாக்கெடுப்பை நடத்துவது என்பது குறித்து முதலில் கருத்துடன்பாடு காணப்படவேண்டும்

கிழக்கு மாகாணத்தில் எந்தத் தேர்தலையும் நடத்துவதற்கு முன்னர் முன்கூறப்பட்ட தேவைகள் பற்றி விளக்கமளிக்க வேண்டும்.

இனப் பிரச்சினைக்கு பரந்த அளவில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதற்கு முன் அடையாள ரீதியான தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுவது தற்போதைய நெருக்கடியை மேலும் அதிகரிக்கவே செய்யும் என்பதை அரசு உணர வேண்டும்.

*மூடி மறைக்கும் முயற்சி*

கிழக்கு மாகாணத்தில் தேர்தல்களை நடத்துவதைக் கைவிட்டு, அதற்குப் பதிலாக சட்டபூர்வமான அபிலாசைகளைத் திருப்தி செய்யக் கூடியதான அரசியல் தீர்வு ஒன்றை காணுவதில் அரசாங்கம் தனது கவனத்தை செலுத்த வேண்டும் என்று தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்,

இலங்கையில் இனப் பிரச்சினை இல்லை என்றும் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை என்றும் ஜனாதிபதி தெரிவித்திருப்பது, தமது கோரிக்கைகளை அடைய தமிழ் பேசும் மக்கள் நடத்தும் சட்ட ரீதியான போராட்டத்தின் உண்மையான அம்சங்களை மூடி மறைக்க எடுக்கப்பட்டுள்ள முயற்சியாகும் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுடன் ஒட்டி உறவாடும் ரெலோவும் சர்வசன வாக்கெடுப்புக்கு எதிராகவே கருத்து வெளியிட்டுள்ளது. அதன் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்:

கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியா நகரம் ஆகிய இடங்களில் உள்ளூராட்சிகளை தேர்தல்களையோ, அல்லது தேர்தல்களையோ நடத்தக்கூடிய சூழக நிலைமை இல்லை.

கிழக்கு மாகாணத்தை பாதுகாப்பு படையினர் இன்னும் முழுமையாக தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவில்லை. தேர்தலை நடத்தக் கூடிய அமைதியான சூழ் நிலை இல்லை.

அப்படி உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்பட்டாலும் அது நீதி, நியாயமான தேர்தலாக அமையாது. எனவே அரசாங்கம் தேர்தலை நடத்தக்கூடாது என தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரேகுரலில் வலியுறுத்த வேண்டும் — என்றுள்ளது.

இந்த விடயத்தில் முஸ்லிம், தமிழ் கட்சிகளும், குழுக்களும் நிரந்தரமாகவே எதிர்ப்புத் தெரிவித்தால் அரசு நடத்த நினைக்கும் சர்வசன வாக்கெடுப்பு முட்டுக்கட்டையில் முடியும்.

அவை தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள மாட்டா என்பதற்கு என்ன உத்தரவாதம்? ★


அழிந்தவன வளங்களை மீள் வளமாக்குங்கள்


# அமைச்சர் தொண்டாவுக்கு சிங்களத்தில் வந்த கடிதம்

## திருப்பி அனுப்பி விட்டார்!!

கொழும்பு, நவ. 7

அமைச்சர் தொண்டமான் தமக்கு வந்த தனிச் சிங்களக் கடிதத்தை திருப்பி அனுப்பிய சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபத்தில் பிரதம விருந்தினராகச் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் அமைச்சர் தொண்டமான் இதுபற்றித் தெரிவித்தார்.

அமைச்சர் தொண்டமான் அங்கு உரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது;

தமிழ்மொழி இன்று அரச கரும மொழியாகி விட்டது பற்றி நாம் மிகுந்த மகிழ்ச்சி அடையும் அதேவேளை சகல கருமங்களும் தமிழ் மொழியில் நடைபெறுவதற்கான வழிவகைகளை நாங்களே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்'

அண்மையில் சிங்கள மொழியில் அரசு எனக்கு அனுப்பி வைத்த அழைப்பு ஒன்றை நான் ஏற்க மறுத்து திருப்பி அனுப்பி விட்டேன். பின்பு அந்த அழைப்பு எனக்கு ஆங்கிலத்தில் வந்து சேர்ந்தது. நான் அதனை ஏற்று வைபவத்தில் கலந்து கொண்டேன்.

இதே போன்று பொது மக்களாகிய நீங்களும் செய்ய முன்வந்தால், இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கண்டு விட முடியும்.

இப்படிக் கூறினார்.

## நல்லை ஆதீன சுவாமிகள் விவகாரம்:

# விசாரணைகமிஷன் அமைக்க கோருகிறது இந்துப் பேரவை

யாழ்ப்பாணம், நவ. 7

நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அண்மையில் சீதுவையில் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்ட சம்பவம் குறித்து யாழ். இந்து சமயப் பேரவை கடுமையாகக் கண்டித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து விசாரணை செய்வதற்கு பக்கசார்பற்ற விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும் பேரவை அரசிடம் கோரியுள்ளது.

இந்து மதத் தலைவருக்கு இத்தகைய செயல் நிகழும் போது சாதாரண பொது மக்களின் நிலை எப்படி இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ள இந்து சமயப் பேரவையினர், இச் சம்பவத்தை அனைத்து மதத் தலைவர்களும் ஒருங்கிணைந்து— ஒரே குரலில்— எதிர்க்க வேண்டும் என்றும் அறிக்கை ஒன்றில் கேட்டுள்ளனர். (ஒ )

## விஜேதுங்க அரசின் முதலாவது

# வரவு செலவுத் திட்டம் 10 ஆம் திகதி சமர்ப்பிப்பு

## ரூ. 7 ஆயிரம் கோடி துண்டு விழும்

ஜனாதிபதி விஜேதுங்காவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டம் இம்மாதம் பத்தாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிதி ராஜாங்க அமைச்சரும் நீதி அமைச்சருமான ஹறோல்ட் ஹேரத் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பார் என்று நிதி அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நிதி அமைச்சராக ஜனாதிபதியே இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில்—

இம்மாதம் 10 ஆம் திகதி அரசாங்கம் சமர்ப்பிக்க இருக்கும் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையாக 7 ஆயிரம் கோடி ரூபா இருக்கும் என்று நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய வரவு செலவுத் திட்டத்தில் பொருள்களின் விலை அதிகரிப்பு அறிவிக்கப்படலாம் என்ற பேச்சுக்கு இடமில்லாத வகையில் கடந்த 2, 3 வாரங்களில் அரசாங்கம் சீனி, மா, எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலைகளை அதிகரித்துவிட்டது.

சீனியன் தற்போதைய விலை கிலோ 30 ரூபா, பாணின் விலை 50 சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் மத்தியிலும் பொதுசனத் தொடர்பு சாதனங்களிடையேயும் புதிய வரவு செலவுத் திட்டம் பற்றிய பரபரப்பு எதுவும் காணப்படவில்லை. (ஒ—எ-6)

# ஒரு வருடகாலத்தின் பின் பயிலுநருக்கு நிரந்தரம்

கொழும்பு, நவ. 7

அரசாங்க நிறுவனங்களில் பயிலுநர்களாக ஒரு வருட காலம் பணியாற்றிய ஊழியர்கள் சலுகை புள்ளிகள் வழங்கப்பட்டு நிரந்தரமாக்கப்படுவார்கள்.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை பொது நிர்வாக மாகாணசபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இந்த சலுகைப் புள்ளி நியமனங்கள் 1993 மே மாதம் 9 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட வேண்டும் என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பொறியியல் தொழில் நுட்பத் துறையைச் சேர்ந்த பயிலுநர்களுக்கு இந்த ஒரு வருட காலச் சலுகை வழங்கப்படமாட்டாது. இவர்களது பயிற்சிக் காலம் நீடிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)


வண்ணைமேற்கு விளையாட்டுக் கழகம்
வண்ணார் பண்ணை வடமேற்கு
ஆனைக்கோட்டை.

முதலாம் ஆண்டு நிறைவு விழா

கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியும்
விளையாட்டு நிகழ்வுகளும்
இடம்பெறும்

காலம்:-
07—11—1993 ஞாயிறு
பிற்பகல் 2 00 மணி

இடம்:-
கழக மைதானம்
வண்-மேற்கு வி. கழகம்,
ஆறுகால்மடம்.
வண்ணார்பண்ணை.

பிரசுர அன்பளிப்பு:-
ஆறுமுகம் சிற்பாலயம்
காளிகோயிலடி, திருநெல்வேலி.
(27936)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வது)

கலாசாலை வீதி, திருநெல்வேலி, கோப்பாய்

# வெற்றிடம்

1. பதவி
கணக்கு பதிவாளர் 165/88 — 12

வேதனம்
855 — 30 X 7 — 40 X 8 — 1385 இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

கல்வி மற்றும் தகைமைகள்
(அ) கூ.ச.ஊ. 13ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதவியில் அல்லது கணக்கு அலுவல்கள் பற்றிய பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 14 ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்கு அலுவல்கள் பற்றிய பதவியொன்றில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது
(ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன மத்திய பரீட்சையில் சித்தி அல்லது
(இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) க. பொ. த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தி

2. பதவி
பால் நிலைய முகாமையாளர் 165/88 — 12

வேதனம்
855 — 30 X 7 — 40 X 8 — 1385 இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்

கல்வித் தகைமை
(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 13ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 14ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது
(ஆ) கூட்டுறவு பணியாளர் (உயர்தர) சான்றிதழ் / க. பொ. த. (உயர்தர) சான்றிதழ் மூன்று பாடங்களுடன் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பால் தொடர்பான தொழில் நுட்ப அறிவுடன் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

பொது
★ வயது எல்லை
வயது 23க்கும் 40க்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும் (தற்போது கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு இந்த நியதி செல்லுபடியாகாது)
★ வசிப்பிடத் தகைமை
குறைந்த பட்சம் 2 வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
★ பிணைப் பணம்
கூ. வே. ஆணைக்குழு சட்டத்திற்கமைவாக சங்கம் தீர்மானிக்கும் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.
★ உள்ளடக்கப்பட வேண்டியவை:
கல்வி, பிறப்பு, நற்சான்று பத்திரங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.
★ விண்ணப்பப் பத்திரம்
ஏற்கப்படும் கடைசித் திகதி
**20 — 11 — 1993**

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் மேற்சொல்லப்பட்ட விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் பதவியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

— தலைவர்.

[சி-6330]

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 22 — 12 — 1944

மறைவு: 10 — 11 — 1990

### சுப்பிரமணியம் தியாகராஜா

(உமா ரேடிங் சென்ரர் பங்காளர்
Uma Trading Centre, கொழும்பு)

வழி சொன்ன தெய்வம் தான் நீங்கள்
போனவழி சொல்லவில்லை
வழியேதும் உண்டோ அப்பா உங்களை
வரவழைக்க மீண்டும்

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

805, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (6587)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07-11-1993 இல் அச்சிட்டு வெளியீடப்பெற்றது.

வர்துவ....
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
'குமண' கப்பல் இந்த தடவையுடன் வடபகுதிக்கான சேவையில் இருந்து இடைநிறுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.
(இ-17-5-108-173)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 7
குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தின் 32 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு காட்சி உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

அந்தப் போட்டியில் ஊரெழு றோயல் வி. க. அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் வி. க. அணி மோதும். (இ-5-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 7
யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நாவாந்துறை கலைவாணி ச. ச. நிலைய மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ நாவாந்துறை புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற ச. ச. நிலைய அணி எதிர் நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலைய அணி
★ நாவாந்துறை சென். மேரிஸ் ச. ச. நிலைய அணி எதிர் அரியாலை ச. ச. நிலைய அணி. (இ-5)

## மரண அறிவித்தல்கள்

### மகேஸ்வரி கிருஷ்ணபிள்ளை

31, ஓட்டுமட வீதி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மகேஸ்வரி கிருஷ்ணபிள்ளை 4-11-1993 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி கனகரத்தினத்தின் (மீனா) அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற Dr. யோகநாதன், ஜெயநாதன் (கனடா), ரோஜா (கனடா), சிவகாமசுந்தரி, சிவக்குமார் (கனடா), காலஞ்சென்ற சிவாஜினி ஆகியோரது அன்புத் தாயாரும், பத்மினி (கனடா), சகானந்தன் (கனடா), தவரட்ணம் (உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்), உதயகுமார் (கனடா), ஒகஸ்ரின் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், டானியா, டாஷா (கனடா), ரோஷினி, ரஜனி (கனடா), சுரேஷ் ..., சிவந்தி (U.K.), துஷ்யந்தி, கிரிஷாந்தி (யாழ். ... லக்கழகம்), வாசுகி, முகுந்தன், ஜெரமி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 4-11-1993 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
S.T. தவரட்ணம்
(மருமகன்)

31, ஓட்டுமட வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (27940)

### திருமதி நாகேசு சரவணமுத்து

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வேலணை கிழக்கில் வசித்தவரும், அண்மையில் திருகோணமலையில் வாழ்ந்தவருமான திருமதி நாகேசு சரவணமுத்து (அம்மா) 5. 11. 93 காலை திருகோணமலையில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலம் சென்ற மலாயன் பென்சனர் சரவணமுத்துவின் அன்பு மனைவியும் காலம் சென்ற காசிலிங்கம், சரஸ்வதி, சாவித்திரி (திலகம்) இராமநாதன் (கந்தசாமி), சுப்பிரமணியம், காலம் சென்ற இலட்சுமி அம்மா, நாகலிங்கசிவம், இரத்தினேஸ்வரி (திருகோணமலை) நல்ல நாயகி (பிரான்ஸ்) என்போரின் அருமைத்தாயாரும், செல்வலக்சுமி, சரஸ்வதி, அமரர் நடராசா, நவமணி, இராமச்சந்திரன் (திருமலை) நடேசானந்தன் ஆகியோரின் அன்புமாமியும், தவக்குமார் பிரதீசன் (லண்டன்) கலாதேவி, வசந்தகுமார், நடனகுமார் (சுடர்மணி), சந்திராதேவி, ரகுராம், வைதேகி, சுரேராம், ரமேஸ், கல்பனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6-11-93 திருகோணமலையில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை திருகோணமலை இந்து மயானத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
ச. இராமநாதன்
(கந்தசாமி)
(மகன்)

130, இராசாவின் தோட்டம்
நல்லூர்
யாழ்ப்பாணம். (27937)

### சின்னத்தம்பி முத்துச்சாமி

திருநெல்வேலி கிழக்கு, பதிவுகாரர் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி, முத்துச்சாமி 6-11-93, காலை 7 மணியளவில் சிவபதமடைந்து விட்டார். இவர் கமலாதேவி, தவமணி (ஜேர்மனி), அருளானந்தம் (லண்டன்), இராசலிங்கம்(கனடா), திருநாவுக்கரசு(ஜேர்மனி), அமுதலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா (திருநெல்வேலி), நடராசா (ஜேர்மனி), மகேஸ்வரி (லண்டன்) செல்வநாயகி (கனடா), நாகரட்ணம் (ஜேர்மனி), சுகந்தி (கனடா) ஆகியோரின் அன்புமாமனும், காலம் சென்ற சின்னப்பு, காலம் சென்ற நல்லம்மா, செல்லத்துரை, செல்லம்மா, (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரவீந்திரதாஸ், காலஞ்சென்ற ரவீந்திரமலர், இந்திரதாஸ், வசந்தமலர், சாந்தமலர், பிரேமதாஸ், யோகமலர், ரஞ்சி, தவராசா, மோகன், சிவா, ராசன், சுகந்தி, ஜெயா, ரூபி, பீமா, ரூபாகரன், சுமதி, சுரேன், அரவிந்தன், ஜீவா, சுதா, வவா, நிறைஞ்சன், ரஸ்மி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 7. 11. 93 காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக, திருநெல்வேலி குறிப்பமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்
நடராசா
(மருமகன்)

பதிவுகாரர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு
திருநெல்வேலி. (27935)

செல்வி
### நேசரத்தினம் சுப்பிரமணியம்
(இளைப்பாறிய உபஅதிபர்)

விமன்காமம் தெல்லிப்பளையைச் சேர்ந்தவரும், தற்பொழுது இல. 40, தயாமுகந்தோர் வீதி மானிப்பாயில் வசித்தவருமாகிய செல்வி நேசரத்தினம் சுப்பிரமணியம் அவர்கள் மறுமைக்குள் பிரவேசித்துள்ளார்.

அன்னார் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரியின் இளைப்பாறிய உபஅதிபரும், காலஞ்சென்ற நொத்தாரிஸ் சுப்பிரமணியத்தின் இளைய மகளும், காலஞ்சென்ற ஆசிரியர்கள் தம்பியையா, இரத்தினசிங்கம், திலகவதி, கனகம்மா ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற இராசரத்தினம், இரத்தினசிங்கம், தங்கரத்தினம், ஞானரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 7 - 11 - 93 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு மானிப்பாயில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நடேஜசுகுசன், இராஜினி

இல. 40, ...
மானிப்பாய். (27941)

## கப்பலில் செல்வோர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், நவ. 7
"ருகுணு" மற்றும் 'வர்துவ' கப்பல் மூலம் திருமலைக்கும் கொழும்புக்கும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள பயணிகள் அனைவரும் இன்று காலை 9-00 மணிக்கு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியில் தம்து பெயர்களை உறுதி செய்து கொள்ளுமாறும் — பிற்பகல் 2-00 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறைக்கு சமுகமளிக்குமாறும் யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (இ-5)


கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

★ தம்பாட்டி காந்திஜி வி. க (B) எதிர் தம்பாட்டி காந்திஜி (C)
★ வண்ணை மேற்கு வி. க (B) எதிர் உடுவில் சென். மேரிஸ் வி. க

காலம்: 7 — 11 — 1993 பி. ப 2.15 மணி
இடம்: கழக மைதானம்
வண்ணை மேற்கு விளையாட்டுக் கழகம்
வண்ணார்பண்ணை வடமேற்கு
ஆனைக்கோட்டை

அன்பளிப்பு:
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி/6532)


## மரண அறிவித்தல்

### அந்தோனிமுத்து திரேசம்மா

சில்லாலையை பிறப்பிடமாகவும், தற்போது நவாலியில் வசித்தவருமான அந்தோனிமுத்து திரேசம்மா காலமானார். இவர் காலஞ்சென்ற அந்தோனிமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மேரியோசவ், சவுந்தரநாயகம், எற்வேட் பங்கிராஸ், மேரிமாகிறேற், தியோனிஸ், இம்மனுவேல், றெஜீனா, சுகிர்தம் ஆகியோரின் அன்புத் தாயாரும், றெஜீனா, மேரிதிறார், யந்தா புஸ்பராணி, மேரியோசவ், நிர்மலா, சறோஜினி, மரியதாஸ், கோபால்சிங்கம் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியை இன்று 07-11-1993 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாளி வீதி, நவாலி தெற்கு இல்லத்தில் நடைபெற்று புனித பீற்றர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
மேரியோசவ்

சாளி வீதி,
நவாலி தெற்கு. (27942)


விவசாயிகளே!
தொழிற்சாலை உரிமையாளர்களே!
இயந்திரப் பாவனையாளர்களே!

எங்கள் வளங்களில் எங்கள் கைகளில்
பெற்றோலிய எரிபொருள் பிரச்சினைக்கான
குறைந்த செலவில் மாற்றீடாக வருகின்றது.




உங்கள்
❊ நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்க
❊ மின் பிறப்பாக்கியை இயக்க
மரக்கரி அல்லது சிரட்டைக்கரி மட்டுமே கொண்டு சக்திமய நரவல்லது தான்

ஆக்கிவாயு பிறப்பாக்கி

(தமிழீழத்தில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டது)

இரகசியம் ஒன்றும் இல்லை
ஆக்கி வாயுப் பிறப்பாக்கிகள் உங்களின் சக்தித் தேவைகளில் பெருமளவை நிறைவேற்ற வல்லன. இவை சிரட்டை, மர கரிகளிலிருந்து உங்கள் பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் இயந்திரங்களை இயக்க வல்ல ஆக்கி வாயுவை உற்பத்தி செய்கின்றன.

★ உங்கள் இயந்திரத்தில் எதுவித மாற்றமும் செய்யாமலேயே ஆக்கிவாயுப் பிறப்பாக்கிகளை இணைத்து இயக்க முடியும்.

முதற்கட்டமாக வூல்சிலி (Wolseley) இயந்திரங்களுக்குப் பொருத்திக் கொள்ளலாம்.

பொருத்த வேண்டுமாயின் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்

எல்லா நாட்களிலும் காலை **10** மணி முதல் பிற்பகல் **2-30** வரை ஆக்கிவாயுவில் இயந்திரம் இயங்குவதை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்

எமது அலுவலகம்:
சக்திப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி, தாவடி.

(சி/6325)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org